1

61

ஸுபாநு ௵
ஆவணி-புரட்டாசி ௴

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 9

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

14 OCT 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

...ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

சென்னை

வர்...
ரூபா 3...

September, 1943
Vol. 2, No. 9

JL
Q22ௐ211, N41
N43.29.
210117

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1. திருப்பாவை 316
2. திவ்ய ப்ரபந்தத்தில் திருமடல் 324
3. ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம் 330
4. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமான அடைக்கலப்பத்து 334
5. செய்திகள் 337
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 339
7. கடோபநிஷத் 105

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸுபாநு ஸ்ரீ ஆவணி - புரட்டாசி மீ	ஸஞ்சிகை 9

210117

OFFICE OF THE REGISTRAR ...
14 OCT 1943
MADRAS

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தகேஹாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட்,
திருப்பாப்புலியூர்]

(ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 6, பக்கம் 216-ன் தொடர்ச்சி)

இவ்வாறு முன் இரண்டு பாசுரங்களால் ஆநுஷங்கிக பலத்தை விஸ்தரித்து, உதாஸீநர்களையும் ப்ரதிகூலர்களையும் அபிமுகர்களாக்கிப் பிறகு, தமது வ்ரதத்தின் பரமோத்தேஶ்யமான நிரதிஶய புருஷார்த்தத்தை ஏற்கனவே முதல் பாசுரத்தில் த்வயமந்த்ரத்தில்போல் அந்வய முகேந 'நமக்கே பறை தருவான்' என்று ஸூசிக்கப்பட்டதை, இங்கு சரமஶ்லோகத்தில்போல் வ்யதிரேக முகேந பலப்ரதிபந்தகமான பாபங்கள் நிவர்த்திக்கும் என்று கூறி ப்ரதம பஞ்சகத்தை நிகமநம் செய்கிறார். இந்தப் பரம பலத்தையே லக்ஷ்யமாகக் கொண்ட இந்த வ்ரதத்தில் அங்கியாய் நிற்பது முன் 'நமக்கே' என்று அகிஞ்சநாதிகாரிகளுக்கு உரித்தானதாக ஸூசிக்கப்பட்ட ஶரணாகதியே யென்றும், மற்றெல்லாக் கிரிசைகளும் அதற்கு அங்கமாக அமைந்து யாதாமொரு ப்ரகாரத்தால் அதைப் போஷிக்கு மென்றும், இச்சரணாகதிக்கு விஷயமாய் நின்று பரஸ்வீகாரம் செய்பவன் முன்பு 'நாராயணன்', 'பரமன்', 'உத்தமன்' முதலிய பரத்வ ப்ரதிபாதகமான ஸாமாந்ய ஶப்தங்களால் குறிக்கப்பட்டவன் இப்போது நம் பாக்ய வசத்தால் நம் முன்னே வந்து நின்று நம்முடன் அத்யந்த ஸௌஶீல்யத்துடன் கலந்து பரிமாறும் கோப நந்தநனே யென்றும், முதற் பாசுரத்தில் 'நந்தகோபன் குமரன்', 'யசோதை இளஞ்சிங்கம்' என்று உபக்ரமித்ததற்கு அநுகுணமாகத் தலைக்கட்டுகிறார் 'மாயனை மன்னு வடமதுரை மைந்தனை' இத்யாதியால்.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினிற் றோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா னின்றனவும்
தீயினிற் றூசாகுஞ் செப்பேலோ ரெம்பாவாய்.

மாயனை—தன்னுடைய 'நவோ நவோ பவதி' என்று சொல்லக் கூடிய திவ்ய ரூபத்தாலும் உச்சாவசமான திவ்ய சேஷ்டிதங்களாலும் எல்லோரையும் விஸ்மயிக்கப்பண்ணும் ஸ்வபாவத்தை யுடையவனை.

அல்லது: "ஃமாயாஂ து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம்" என்றபடி த்ரிகுணாத்மகமான ப்ரக்ருதி தத்வத்துக்கு ஸ்வாமியானவனை. இத்தால், "தஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:" என்றபடி ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமாயிருப்பவனை என்று சொன்னதாயிற்று. இதுவே "ஸதஸ்விவிலீநாந் ப்ரளயே ஜந்தூந் அவலோக்யஜாதநிர்வேதா| கரணகளேபரயோகம் விதரஸி வ்ருஷ ஶைலநாத கருணே த்வம்" என்றபடி பகவான் நமக்கு அவ்யாஜக்ருபா பரவசனாகச் செய்யும் ப்ரதமோபகாரமாகும். பிறகு மேலே செய்துள்ள விஶேஷோபகாரங்களைக் கூறுபவராய்க்கொண்டு 'மாயனை' என்று பொதுவாகக் குறித்த ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை வரிசையாய் விவரிக்கிறார்.

மன்னு வடமதுரை மைந்தனை—வடமதுரையில் ஸ்திர ப்ரதிஷ்டிதனை அதிபதியை. இத்தால் 'மதுரா நாம நகரீ புண்யா பாபஹரீ ஶுபா' யத்ர நித்யம் ஸந்நிஹிதோ ஹரி:' என்றபடி மதுராபுரியில் பகவானது நித்ய ஸாந்நித்யம் பேசப்பட்டது. அல்லது: மைந்தன் என்பதற்குக் குழந்தை யென்று பொருள் கொண்டால், பகவானுடைய நித்ய ஸாந்நித்யத்தால் வலிமை வாய்ந்த மதுராபுரியில் வந்து அவதரித்த அத்புத பாலகனை என்பது பொருள். இத்தால், 'ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:| நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்||' என்றபடி பாற்கடலுள் மஹாலக்ஷ்மியால் பாத ஸம்வாஹநாதி பரமோபசாரங்களைப் பெற்று ஸுகுமார ஸுரபி ஶீதலமான அரவணையின்மேல் பையத் துயின்ற பரமன் ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தம் கம்ஸ காராக்ருஹத்தில் தேவகீ ஸூதிகா க்ருஹத்தில் வந்து அவதரித்த ஸௌலப்யாதிஶயம் கூறப்பட்டது. இவ்விசேஷணத்தால் முன் 'மாயனை' என்று பொதுவாக ப்ரக்ருத்யதிஷ்டாந பூர்வகமாய் ஜகத் ஸ்ருஷ்ட்யாதியான உபகாரம் செய்ததால் ஏற்பட்ட மாயித்வத்தைக் காட்டிலும் விலக்ஷணமானதும், ஆஶ்ரிதர்களுக்கு அந்தரங்கோபகாரகமுமான 'ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா' என்றுதாமே அருளிச்செய்த அவதாரரூப பரிக்ரஹமான மாயித்வம் நிர்த்தேஶிக்கப்பட்டது. இங்கு 'வடமதுரை' என்று கூறியதால், ஆண்டாள் தாம் தென்னாட்டில் அவதரித்ததை ஸூசிப்பித்திருக்கிறார். மேலும்: இத்தால் அக்காலம் தென்மதுரையுமுள தென்பதும், தென்னாட்டார் மதுரை யென்று நிருபபதமாகக் கூறினால் அதுவே குறிக்கப்பட்டதாகு மென்பதும் ஏற்படுகின்றன. இப்படி அவதாரத்தைச் சொல்லி, அவதார ஸம்பந்திகளான திவ்ய சேஷ்டிதங்களை அநந்தர ஸம்போதநங்களால் வர்ணிக்கிறார்.

தூய பெருநீர் யமுனைத் துறைவனை:—பரிசுத்தமான வெள்ளப் பெருக்கையுடைய யமுனா நதியின் துறையில் அமர்ந்திருப்பவனை. இத்தால்: மதுராபுரியில் ராஜ க்ருஹத்தி லிருந்தால் அனைவர்க்கும் தன் ஸேவை கிடைப்பது அரிதாகுமென்று எண்ணி, ஜனங்களுக்கும்

கோசரமாம்படி யமுனையாற்றுத் துறையில் வந்து நிற்கும் ஸௌலப்யாதிசயம் குறிக்கப்பட்டது. அல்லது: விஷ ஜ்வாலையால் யாரும் அணுக முடியாதிருந்த காளிய மடுவை ஸர்வோபபோக்யமான தூய பெருநீருள்ள துறையாக்கின ப்ரபாவம் இத்தால் கூறப்படுவதாகவும் கொள்ளலாம். அல்லது: பகவான் அவதரித்தவுடன் வஸுதேவர் தமது அத்புதப் புதல்வனைக் கைபிலேந்தி யமுனையாற்றண்டை வந்தபோது, "மகோநி வர்ஷத்யஸக்ருத்யமாநுஜா கம்பீரதோயௌகஜவோர்மிஃபேநிலா | பயாநகாவர்தஶதாகுலா நதீ மார்கம் ததௌ ஸிந்துரிவ ஶ்ரிய:பதே: ||" என்றபடி பெருவெள்ளப் பெருக்குடன் பயங்கரமாய் ஓடிக்கொண்டிருந்த அம்மஹா நதி வஸுதேவருக்குத் துறையுண்டாக்கித் தரும்படி செய்த திவ்ய மஹிமை இங்கு நிர்த்தேசிக்கப்பட்டதாகும். அவ்வகையில் அவதாரத்துக்கு அநந்தர கதை இத்தால் ஸங்க்ரஹீதமாகிறது. பிறகு உதோவ்ருத்திசயிதமான ஸௌலப்யத்தைக் குறிக்கப் புகுந்து மேல் வ்ருத்தாந்தத்தை ப்ரஸ்தாவிக்கிறார்.

ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை:—மிகச் சிறியரான கோப ஜனங்களின் நடுவில் ஸர்வலோக விலக்ஷணமான தேஜஸ்ஸுடன் ப்ரகாசிப்பவனை. 'குலத்தினில் தோன்றும்' என்றதால், அக்குலத்திலேயே பிறந்தவன்போல் சிறிதும் பேதமில்லாமல் கலந்து பரிமாறின சாதுர்யமும் ஸௌசீல்யமும் வ்யஞ்ஜிதமாகின்றன. மேலும்: 'தோன்றும்' என்கிற வர்த்தமாந ப்ரயோகத்தால், 'இதுவரையில் இல்லாமல் இப்போது நம் பாக்யவசத்தால் புலப்படுகிறான்; இவ்விதமான பாக்யம் நமக்கு எப்போதும் இருப்பது ஸம்பாவித மில்லை' யென்கிற ஶங்கையுடன், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்கிற பழமொழியை அநுஸரித்து, 'இப்போதே நாம் அவனைச் சரணம் புகுந்து க்ருதார்த்தர்களாவதற்கு த்வரிக்கவேண்டும்' என்பது ஸூசிக்கப்படுகிறது. 'ஆவிராஸீத்யதா ப்ராச்யாம் திஶீந்துரிவ புஷ்கல:' என்றபடி ஆயர்குலத்தில் தோன்றினதாகச் சொன்னதால், அங்குத் தென்படுவது தவிர வேறுவிதமான ஸம்பந்த மில்லை யென்பது வ்யஞ்ஜிதம். 'மணிவிளக்கை' என்றதால், 'அதிதேஜிஷ்டமான மஹாரத்நமே அஸ்நேஹ தீபிகையாக அமைந்தால் எப்படி அசைவு குறைவு முடிவு முதலிய தோஷங்களின்றி நித்ய ப்ரகாசமாய் விளங்குமோ, அப்படியே பகவான் தமது விபவ கோடியிற் சேர்ந்த எந்த நீச வர்க்கத்தில் அவதரித்தபோதிலும் அஜஹத் ஸ்வபாவனாய் அநவரத ப்ரமத்ஸ்வஶக்தி சாமரங்களால் தூரோத்ஸாரித ஸமஸ்த ஹேயனாய் ஸ்வே மஹிம்நி நித்யப்ரதிஷ்டிதனாய் ப்ரகாஶியாநின்று ஸந்நிஹிதர்களையும் ப்ரகாசிப்பிக்கிறான் என்பது நிர்த்தேசிக்கப்பட்டது. மேலும் மணிதீபம் அணுகுபவருக்கு ஸ்பர்ஶாநுகூலமாயிருந்துகொண்டே அந்தகாரத்தைப் போக்குவதுபோல், பகவான் தனது ஆஶ்ரித ஜனங்களுக்கு ஸர்வ ப்ரகாரத்தாலும் போக்யனாயிருந்து தாமஸ ப்ரக்ருதிகளான தர்ம த்வேஷிகளைத் தொலைத்தா னென்பதும்

ஏற்படுகிறது. மஹா ரத்நமானது எப்படி தன்னுடைய ஸாந்நித்யத்தாலேயே அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டத்தை ஸாதிக்குமோ, அவ்விதமே 'ஜயதி தேஜயிகம்' இத்யாதிகளிற் கூறியபடி இங்குமென்பதும் தோற்றுகிறது. அல்லது: இந்த விசேஷணத்தால், பகவான் அவதரித்தவுடனே வஸுதேவர் அவரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு யமுனையாற்றைக் கடந்து நந்தகோகுலத்துக்குச் சென்று எல்லோரும் உறங்கிக் கிடக்கும்போது நடு இரவில் ஒருவரும் அறியாமல் தம் புதல்வனை யசோதைப் பிராட்டியின் பக்கத்தில் விட்டு, அவளுடைய குமாரத்தியை எடுத்துவந்த பிறகு, எல்லோரும் கண்விழித்துச் சேற்றுக் குளத்தில் பொற்றாமரை போல் ஆயர் குலத்தில் தோன்றின மணிவண்ணனைக் கண்டு வியந்து களித்த அதிசயம் குறிக்கப்பட்டதாகவும் கொள்ளப் பொருந்தும். அப்போது 'மணிவிளக்கை' என்றதால், 'ஸுரொவிஷாஹாரத ஸூதிகாஶ்ரஹம் விரொவயஞ்' என்றபடி பகவானுடைய நிகரற்ற திருமேனி ஒளி விளக்கப்பட்டது. 'ஹரிநீலமணிரா விஹம் மநீஷா:' இத்யாதிகள் இதற்குச் சான்றாகும். இம்மணிவிளக்கால் ஆயர் குலம்முற்றும் விளங்கியது ஒருபுறம் இருக்கத் தனிமையில் யசோதைத் தாய்க்கு உண்டான விளக்கத்தின் பெருமையைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்.

தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை :—இவனைப் பெற்ற வயிறல்லவோ பரம பாக்யம் பெற்றது என்று ஸர்வ லோகங்களும் உத்கோஷிக்கும்படி தன் தாயாகிய யசோதைப் பிராட்டிக்குப் புகழை வாங்கிவைத்த தாமோதரனை. இங்கு, 'தாமோதரனை' என்றதால், மற்றெல்லாவற்றைக் காட்டிலும் யசோதை இவனைக் கயிற்றால் கட்டியதே அவளுடைய நிகரற்ற புகழ்க்கு ப்ரதாந காரண மாயிற்றென்பது கருத்து.

"ஸ ஶாதஸ்விஹ மாதுராயா விஸ்ரஸ்தகவரஸ்ரஜ: |
த்ருஷ்ட்வா பரிஶ்ரமம் க்ருஷ்ண: க்ருபயாஸீத் ஸ்வபந்தநே ||
ஏவம் ஸந்தர்ஶிதா ஹ்யங்க ஹரிணா ப்ருத்யவஶ்யதா |
ஸ்வவஶேநாபி க்ருஷ்ணேந யஸ்யேதம் ஸேஶ்வரம் வஶே ||
நேமம் விரிஞ்சோ ந பவோ ந ஶ்ரீரப்யங்கஸம்ஶ்ரயா |
ப்ரஸாதம் லேபிரே கோபீ யத் தத் ப்ராப விமுக்திதாத் ||"

என்கிற ஸ்ரீ சுக ப்ரம்ஹத்தின் திவ்ய ஸூக்தி இங்கு அநுஸந்தேயார்ஹமாகும். இவ்விதம் பகவானுடைய ஸௌலப்ய பராகாஷ்டை இந்த வ்ருத்தாந்தத்தினால் விளங்குவதைக்கொண்டே 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயனென்னப்பன்' என்று ஸ்ரீ மதுரகவி யாழ்வாரும் உதாஹரிக்க நேர்ந்தது. எப்படி ஜகத் ஸ்ருஷ்டி முதலான ப்ரபல கார்யங்களைக்கொண்டு அவனை 'மாயன்' என்று கூறுகிறோமோ, அப்படியே தன்னைச் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப் பண்ணியதும் அவனது விசித்ர ஶக்தியையே வ்யஞ்ஜிப்பிக்கிறது என்று

கருத்து. இவ்வளவு ஸௌலப்யத்தைப் பகவான் வெளியிடுவதற்கு ப்ரயோஜக ஹேதுவான யஶோதைப் பிராட்டிக்கு இத்தால் உண்டான யஶ: ப்ரகாஶம் நிகரற்றதென்று தாத்பர்யம். ‘தாயைக் குடல்விளக்கம் செய்த’ என்றதால், பெற்றவளுக்குக்கூட இல்லாத பேறு இவள் பெற்றாள் என்பது ஸூசிக்கப்பட்டது. ‘யெட்வாநெ’ என்கிற தாதுவி லிருந்து வந்த ‘தாத்ரீ’ சப்தத்தின் திரிபாகிய ‘தாய்’ என்னும் பதம் பால் கொடுத்து வளர்த்தவளை முக்யமாய்க் குறிப்பதால், இங்கு யசோதை பகவானுக்கு ஸ்தந்ய தானத்தால் மாதாவானாள் என்பது ஸூசிக்கப் பட்டது. அவளது குடல் விளக்கப்பட்டதென்பதால், ஸ்தந்ய பானம் முதலிய ஸர்வ ப்ரகாரங்களாலும் அவளையே தன் தாயாகப் பகவான் கொண்டாடியது காரணமாக, உலகம் முழுதும் அவளே பெற்றெடுத் தவள் என்று நினைத்து அவளுடைய வயிற்றின் பெருமையை மெச்சிப் பேசினார்கள் என்பது தாத்பர்யம். அல்லது ‘குடல்’ என்பதற்கு ஶரீரம் என்று பொருள் கொள்ளலா மாகையால், ‘குடல்விளக்கம் செய்த’ என்பதற்கு ‘ஶரீர ஸம்பந்தத்தைப் போக்கின’ என்றர்த்தம் ஏற்படு கிறது. ஆதலால் பகவான் தான் கட்டுப்பட்ட மாத்ரத்தில் தன்னைக் கட் டின தாயின் ஸர்வ கர்மங்களையும் விலக்கி அவளை ஸம்ஸார பந்தத்தி லிருந்து விலக்கினான் என்று கூறியதாகிறது. இத்தால் தாமோதரனை த்யானிப்பவர்களுக்கு,

‘பந்தம் தயா பாவயதாம் முகுந்தம் யத்விலோகிநி கர்மபந்தே |
தவாபி தந்த்ரா நீதிராத்யா ஸர்வஜகாரண்யகாயாஸ்தவ ||’

என்று ஆசார்யன் யாதவாப்யுதயத்தில் அருளிச்செய்தபடி, கர்மபந்தம் தானே விலகும் என்பது ஸூசிக்கப்பட்டதாகும். இது, மேல் சொல்லப் படுவதைக் கொண்டும் த்ருடீக்ருதமாகிறது. இவ்விதமான விசித்ர திவ்ய சேஷ்டிதங்களால் எல்லோரையும் மயக்கிய மாயனை என்றபடி.

தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது :— நாம் இவ்ரதத்தை அநுஷ்டிக்கப் புகுந்த அதிகாரிகளாகிய நாம்; தூயோமாய்- பரிசுத்தமாக; அதாவது:

“பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி |
ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: ||”

என்று கீதாசார்யன் அருளிச்செய்தபடி ஏகாந்த பக்தியால் பரிசுத்தம் செய்யப்பட்ட அந்த: கரணத்துடன் கூடினவர்களாக. **வந்து**—நம்மை ரக்ஷிப்பதற்காகவே பரமக்ருபையுடன் நம்மைத் தேடி வந்திருக்கும் கோவிந்தனை யணுகி. தூமலர் தூவி—பரிசுத்தமான புஷ்பங்களால் அர்ச்சித்து. புஷ்பங்களுக்குப் பரிசுத்தியாவது: பகவதர்ஹமான பத்ம மல்லிகா சம்பகாதி வர்க்கத்தைச் சேர்ந்தவைகளாகவும், பாவநமான கந்தத்தை யுடையவைகளாகவும், பவித்ரமான இடத்தில் உத்பத்தி யானவைகளாகவும், பரிசுத்தர்களால் நியமத்துடன் சேகரிக்கப்பட்டவை களாகவு மிருப்பதே. இங்கு ‘மலர்’ என்று புஷ்பத்தைக் கூறியது

திருத்துழாய் முதலிய திவ்ய பத்ரங்களுக்கும் உபலக்ஷண மாகும். 'தூவி' என்றதால், 'ஈவ தம்ஸயஞி டியஶா நாஃ ஶிரீஷக௱ஸ௱ஶாநி' என்றபடி மலர்களின் மார்த்தவத்தைக் கணிசித்து அவைகள் வுலித மாகாவண்ணம் லலிதமாய்க் கையிலெடுத்துப் பக்தி புரஸ்ஸரமாய் விநயத்துடன் ஸமர்ப்பிப்பது ஸூசிதமாகிறது. தொழுது—ஸாஷ்டாங்க ப்ரணமம் செய்து.

'கூமெ்ஶூவஃ வத௱ஶ வாஓாநு ஶிரஹுஒெதுவ வம்வஶழ |
ஶெ.நாவ௱ஜு)ஹம்காஶள வ நிக்ஷிவ) வஸ௱யா தஒெ ||'

என்கிறபடி கர்மேந்த்ரியங்களில் ப்ரதாநமான கை கால்களையும், ஸர்வாவயங்களுக்கும் ப்ரதாநமான ஶிரஸ்ஸையும், அந்தரிந்த்ரியமான மநஸ்ஸையும், அஹங்கார மமகாரங்களுக்கு அதிஷ்டாநமா யிருக்கும் புத்த்யஹங்காரங்களையும் பகவானுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்து ஆத்மாவை அங்கேயே நிக்ஷேபம் செய்து என்றபடி.

வாயினுற் பாடி:—அவனது திருக்கல்யாண குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் வாயாரப் பாடி.

'ஹஷ ஒஶ ஸவூயஶூாணாம் யஒஶூா஽யிக தஒஶா ஶதஃ |
யஜ்ஞஸ்ஹ்)ா வ௱ஹுஶீகாக்ஷம் ஹுஒெவஶெவூஹஶஹுஃா ||'

'நிவூஸ்ஹ தஒெஷூஶ௱வமீயஶா நாஜூவளஷயாஹெூரா தூ
ஶெநாஹிஶாஶாஃ | க உஸ்ஹஶெஹ்ாகஶ௱ணா ந௱வாஃாஃ
வ௱ஶாநு விஶெஜு)த விநாவஶ௱ஹுாஃ ||'

என்றபடி பகவானுடைய திவ்ய குணுதிகளை ஸ்தோத்ரம் செய்வது ஸ்தவ்யனுகவும் ஸ்தவப்ரியனுகவும் இருக்குமவனது உகப்புக்கு ஹேதுவாகும் ப்ரதாந கைங்கர்யமாகப் பெரியோர்களால் கொண்டாடப்பட்டிருப்பதுபற்றி அது நமக்கும் க்ராஹ்யதமம் என்று தாத்பர்யம்.

மனத்தினல் சிந்திக்க:—இவ்வாசிக கைங்கர்யம் நடந்தேறிய பிறகு, அந்த ஸ்தவங்களின் அர்த்தாநுஸந்தாந பூர்வகமாக அவைகளுக்கு விஷய பூதனுன பரமாத்மாவின் திவ்யமங்கள விக்ரஹத்தை ஏகாக்ரமாக த்யாநம் செய்ய.

'தஒஶவ வாவூயஞி தூ)ம் ஹஸ்ஹ)ா வ௱ஶ௱ஷஶவ)யழ |
யூ)ாயம் ஹு௱வஞஶவ)ம்ஹு........ஸவூஃ௱ஃவா திஒெமா ஹஒெவஃ ||'

என்னும் பீஷ்ம ப்ரோக்தம் இதற்கு மேற்கோளாகக் கொள்ளத்தகும். இங்கே கூறப்பட்ட வரிசையைக் கவனித்தால், பரமைகாந்திகளின் பாஞ்சகாலிக நியமம் அநுஸரிக்கப்பட்டதாகத் தெரியவரும். அதாவது: 'தூயோமாய் வந்து' என்று அபிகமநமும், 'தூமலர்' என்றதால் ஆராதந ஸாமக்ரீ ஸம்பாதந ரூபமான உபாதாநமும், 'தூவித் தொழுது' என்று இஜ்யையும், 'வாயினுற் பாடி' என்று ஸ்வாத்யாயமும், 'மனத்தினுற் சிந்திக்க' என்று யோகமும் விவக்ஷிதமாகக் கொள்ளலாம். அல்லது: இங்கு ஸாங்கமான பரந்யாஸம் விவக்ஷித மென்றும்

கொள்ளப் பொருந்தும். நாம்—'பக்த்யாதௌ ஶக்த்யபாவ: ப்ரமிதிரஹிததா ஶாஸ்த்ரத: பர்யுதாஸ: காலக்ஷேபாக்ஷமத்வம்' என்கிறபடி ப்ரபத்யுபாயத்துக்கு வேண்டிய ஸர்வாதிகார லக்ஷணங்களும் பூர்ணமாய் அமைந்துள்ள அகிஞ்சந ஸார்வபௌமைகளாகிய நாம். தூயோமாய்—நமது ஆகிஞ்சந்யத்தின் அநுஸந்தாந ரூபமான கார்ப்பண்யம், ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜநம், ரக்ஷிஷ்யதீதி மஹாவிஶ்வாஸம் ஆகிய நான்கு அங்கங்களின் பூர்த்தியினால் பரிசுத்தமடைந்த மநஸ்ஸை யுடையவர்களாய். வந்து—அதிஸுலபனும் பரம க்ருபாளுவுமான நமது நாதனை அணுகி நம்மை ரக்ஷித்தருளவேண்டு மென்று கேட்பதால் கோப்த்ருத்வவரணம் செய்து. தொழுது—அவனது திருவடித் தாமரையில் நம் ரக்ஷாபரத்தை ந்யாஸம் செய்து. தூமலர் தூவி வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க—தாவந் மாத்ரத்தால் க்ருதக்ருத்யர்களாய் அதனால் ஏற்பட்ட நிர்ப்பரத்வாநுஸந்தாநத்தால் வளர்ந்த பரமாநந்தத்தின் பரீவாஹமாய் அவனுடைய திருவடிகளைப் புண்ய கந்தம் வாய்ந்த புஷ்பங்களால் அர்ச்சித்து, அவனது குணங்களை ஶ்ராவ்யமாய்ப் பாடி, அவனுடைய திவ்யமங்கள விக்ரஹமும் அவன் செய்த மஹோபகாரங்களும் எந்நாளும் நம் மனத்தைவிட்டு அகலாதபடி நிரந்தர சிந்தநத்தினால் நம் உள்ளத்தில் ஸ்திர ப்ரதிஷ்டிதமாக்கினால். இத்தா லுண்டாகும் ப்ரயோஜநத்தை மேலே கூறுகிறார்

போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பு என்று. ஸஞ்சிதம், ஆகாமி, ப்ராரப்தம் எனும் மூவகைப் பாப வர்க்கங்களையும் நெருப்பிலிட, அவை ஊகுப் பஞ்சுபோல் இருந்தவிடந்தெரியாமல் நசிக்கும். இவ்விதம் பலம் கூறியதைக்கொண்டு இங்கு ப்ரபத்யுபாயமே குறிக்கப்பட்டதென்று நிச்சயிக்கவேண்டியதாகிறது. 'தததிகம உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத்' என்று பக்தி யோகமாகிற வித்யாநிஷ்பத்திக்கு ப்ரயோஜநமாக ஆகாமி ஸஞ்சிதம் என்கிற இருவகைப் பாபங்களின் பரிஹாரமே ப்ரம்ஹ ஸூத்ரத்தில் பேசப்படுவதாலும், ப்ரபத்தியை 'ஸாத்யபக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ' என்று ப்ராரப்த பாபங்களையும் போக்கும் திறமை வாய்ந்த பலீயஸ்ஸான மோக்ஷோபாயமாய் விதித்திருப்பதாலும், இவ்வபிப்ராயமே ஸாதிஷ்டமென்று ஏற்படுகிறது. மேலும்: முற் கூறியபடி அநுஷ்டாதாக்களுடைய அதிகாரத்தைக் கணிசித்தாலும் இது ஸ்பஷ்டமாகிறது.

'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா |
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||'
'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ||'

இத்யாதி ஶரண்ய வாக்யங்களே இவ்விதமான ப்ரபத்தியின் ப்ரபாவத்துக்கு ப்ரமாணங்களாகும். 'தீயினில் தூசாகும்' என்பதற்கு, மற்றை வஸ்துக்கள்போல் அல்லாமல் தூசு என்கிற ஊகுப் பஞ்சு அதி ஸூக்ஷ்ம

பதார்த்தமானபடியால், அதை நெருப்பில் இட்டால் கரி சாம்பல் முதலியன ஒன்றும்மிச்சப்படாமல் நிஶ்ஶேஷமாய் நசிக்கும்; அவ்விதமே ஸர்வ கர்மங்களும் ஸவாஸநோந்மூலிதங்களாகும் என்பது கருத்து. இத்தால்: '𑌤𑌦𑍍𑌯𑌥𑍇𑌷𑍀𑌕𑌾𑌤𑍂𑌲𑌮𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑍋𑌤𑌂 𑌪𑍍𑌰𑌦𑍂𑌯𑍇𑌤 𑌏𑌵𑌂 𑌹𑌾𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌦𑍂𑌯𑌨𑍍𑌤𑍇' என்கிற ஶ்ருதி உபப்ரம்ஹிதமென்று கண்டுகொள்ள ப்ராப்தம். இதன் யாதார்த்யத்தில் தனக்குள்ள விஶ்வாஸ தார்ட்யத்தைத் தெரிவிப்பதற்காக, செப்பு—'நீ சொல்' என்று புரோவர்த்தியான உபதேஶ்ய கோடியில் சேர்ந்த ஒரு வ்யக்தியை நோக்கி '𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿' என்கிற கணக்கில் கூறியதாகும். இத்தால்: இவ்வுபதேசம் ஸாரதமமென்றும், இதன் உண்மையைப் பற்றிச் சிறிதும் சங்கிக்க இடமில்லையென்றும், இதனை ஸகலரும் எங்கும் உத்கோஷித்து லோகத்தை உஜ்ஜீவிக்கச் செய்யத்தகும் என்றும் ஸூசிதம்.

ஏலோர் எம் பாவாய்:—முன்போலவே ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் இச்சொற்கள் ப்ரயோகிக்கப்படுவதாலேயே இப்ரபந்தம் முழுதும் உபதேஶ ரூபமென்று ஏற்பட்டபோதிலும், இங்கு 'செப்பு' என்று விசேஷித்துக் கூறியதற்குத் தாத்பர்யம், இப்பாசுரமே கீதைக்குச் சூடாமணிபோல் விளங்கும் சரம ஶ்லோகம் போலவும், ஸ்ரீமத்ராமாயணத்துக்கு நடுநாயகம்போல் விளங்கும்

'𑌸𑌕𑍃𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌯 𑌤𑌵𑌾𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌚 𑌯𑌾𑌚𑌤𑍇 ।
𑌅𑌭𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮 ॥'

என்கிற ஸ்ரீராம ப்ரதிஜ்ஞா வாக்யம் போலவும், இத்திவ்ய ப்ரபந்தத்தின் ஸர்வஸ்வம் என்பதை வ்யக்தமாக்குவதற்கென்று கொள்ள ப்ராப்தம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸுபாநு௵ புரட்டாசி௴

1௨ வெள்ளிக்கிழமை	—	கந்யா ஸங்க்ரமணம்: கந்யாரவி 4-58: சூந்ய திதி. 5௨ செவ்வாய்க்கிழமை — மத்யாஷ்டமி.
2௨ சனிக்கிழமை	—	மஹா பரணி.
9௨ சனிக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
10௨ ஞாயிற்றுக்கிழமை	—	கந்யா க்ருஷ்ண த்ரயோதசி திதி.
11௨ திங்கட்கிழமை	—	அதிதி.
12௨ செவ்வாய்க்கிழமை	—	கந்யா க்ருஷ்ண சதுர்த்தசி திதி.
13௨ புதன்கிழமை	—	அமாவாஸ்யை.
19௨ செவ்வாய்க்கிழமை	—	ஷஷ்டி - ஸப்தமி திதித்வயம்: ஸ்ரீமதாதிவண்ஶட கோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
20௨ புதன்கிழமை	—	அஷ்டமி திதி.
22௨ வெள்ளிக்கிழமை	—	மஹாநவமி: ஸ்ரீ ஹயக்ரீவாராதநம் (ஸரஸ்வதி பூஜை) ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் திருநக்ஷத்ரம்.
23௨ சனிக்கிழமை	—	(ஸ்ரீ வைஷ்ணவ) விஜயதசமி.
24௨ ஞாயிற்றுக்கிழமை	—	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி.
31௨ ஞாயிற்றுக்கிழமை	—	கந்யா க்ருஷ்ண சதுர்த்தி திதி: துலா ஸங்க்ரமணம்: துலாரவி 32 - 20.

[ஆவணி௴ 29௨ ஸ்ரீ அழகியசிங்கர் திருமுடி விளக்கம்; 30௨ புதன்கிழமை உத்தாநம்.]

2

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

திவ்ய ப்ரபந்தத்தில் திருமடல்

[ஒரகடம் ஸ்ரீ. உப. கோ. ஸுதர்ஸநாசார்யர், (ரிடயர்ட்) தமிழ்ப் பண்டிதர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை]

ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் சிறந்த மெய்யடியார்களென்று கொண்டாடப்பட்டு வரும் ஆழ்வார்கள் பதின்மர், ஆண்டாள், மதுரகவிகள் ஆகிய இவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களே நாலாயிர திவ்ய ப்ரபந்தமாகும். இப்ரபந்தங்களுள் நம்மாழ்வார் அருளிச் செயலான திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி, ஆகிய இவைகள் முறையே ருக்வேதம் யஜுர் வேதம், அதர்வ வேதம், ஸாமவேதம் ஆக * நான்கு வேதங்களென்று வ்யவஹரிக்கப்படும். இவற்றிற்குத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் ஆறு ப்ரபந்தங்களும் அங்கங்களாகும். மற்றை ஆழ்வார்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் உபாங்கங்கள் என்று சொல்லப்படும். இந்த ப்ரபந்தங்கள் அவதரித்த க்ரமத்தாலும், அவைகளில் ப்ரதிபாதிக்கப்படும் அர்த்தங்களுடைய கௌரவத்தாலும், வக்தாக்களுடைய வைலக்ஷண்யத்தாலும் இவைகளின் உத்கர்ஷம் எல்லையற்றது.

வால்மீகி பகவானுக்கு க்ரௌஞ்ச மிதுநத்தைக் கண்டவளவில் ப்ரம்ஹாவின் ப்ரஸாதத்தாலே ஶோகம் ஶ்லோக ரூபமாய் ஸ்ரீ ராம சரித்ரமான ஸ்ரீமத் ராமாயணம் அவதரித்தது ஜகத் ப்ரஸித்தம். அன்றியும் அவ்விதிஹாஸ ரத்நம் வேதோபப்ரம்ஹணமாயும் லோகோஜ்ஜீவநமாயும் விளங்கி வருகிறதென்பதும் யாவரும் அறிந்த விஷயம். அவ்வாறே நம்மாழ்வாருடைய ப்ரபந்தங்களும் ஸர்வேஶ்வரனுடைய க்ருபையாலே வேதாந்தோபப்ரம்ஹணமாயும் லோகோஜ்ஜீவநத்துக்கு ஸாதநமாயும் விளங்கி வருகின்றன. இது மற்றெல்லா ப்ரபந்தங்களுக்கும் ஒக்கும்.

வேதங்கள் அபௌருஷேயங்களாய் இருப்பனபோல, நம்மாழ்வார் ப்ரபந்தங்களும் அபௌருஷேயங்கள். அஃது எங்ஙனே யென்னில்:

---

* இக்கருத்தை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில்:

“ஶூத்ரா ஶாரீரகார்த்தப்ரதிஹதிவிஶதம் விம்ஶதிர்யுக்திஸாத்ரா
ஸம்க்ஷேபோக்த்யா விஹாரம் ப்ரதயதி ச ஶிவாம் சாரு வாணீவ-
வத்ரு |
ஸத்ருஹீதாநுபவம் ஸகலேந்த்ரம் ஸாமஶாகாஸஹஸ்ரம்
ஸம்வத்ஸ்ரம் ஸாஹிதி ஜெஜாவீ ச ஶ்ருதிகத்யாயவா
ரஸேஷு ||”

என்னும் ஶ்லோகத்தால் அருளிச்செய்தது காண்க.

வேதங்கள் ப்ரளய காலத்தில் நஷ்டமாகி ஸ்ருஷ்டி காலம் வந்தவாறே ஸர்வேஶ்வரனுடைய திருவுள்ளத்திலிருந்து சிறிதும் சிதையாமே (பூர்வ ஸ்திதிபோல) ப்ரம்ஹாவுக்கு உபதேஶிக்கப்பட்டது. பிறகு ப்ரஹ்மா மற்ற ருஷிகளுக்கு உபதேசம் செய்தார். ப்ரதம உபதேச பாத்ரபூதர்களான ரிஷிகளையிட்டுச் சில வேத பாகங்கட்கு ஆருணம் காடகம் முதலிய ஸம்ஜ்ஞைகள் ஏற்பட்டாற்போல, இங்கும் இந்த த்ராவிட வேதங்களை ஸர்வேஶ்வரன் நம்மாழ்வாருக்கு உபதேசிக்க, அவர் ப்ரதம உபதிஷ்டாவாக ஏற்பட்டபடியால், ஆழ்வார் அருளிச் செய்ததாக இந்த ப்ரபந்தங்கள் வ்யவஹரிக்கப்படுகின்றன. ஆதலின் ஸம்ஸ்க்ருத வேதங்களைப்போலவே த்ராவிட வேதங்களான ஆழ்வார்கள் அருளிச் செயல்களும் அபௌருஷேயங்கள் என்று சொல்லத் தட்டில்லை. இதனை: "ஶடாரீணாம் ப்ரபந்தாவளீநாம் ஸம்ஹிதாம் த்ராவிடவேதம் 'த்ரமிடோபநிஷத் ஸாரம்........' எனும் ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ஸூக்திகளால் அறியலாம். மற்றை ஆழ்வார்களும் நம்மாழ்வாரைப்போல் மயர்வற மதிநல மருளப் பெற்றவராதலின், அவர்களுடைய ப்ரபந்தங்களும் அபௌருஷேயங்களென்றே கொள்ள ப்ராப்தம்.

ஆழ்வார்கள் பகவானை அநுபவித்த விதம்

ஆழ்வார்கள் தங்கள் ப்ரபந்தங்க்ளில் ஈஶ்வரனை நாயகனாகவும் தங்களை நாயகிகளாகவும் நினைத்து, அந்த நாயகனுடைய விஶ்லேஷ காலத்தில் விரகதாப மிகுதியால் தூதப்ரேஷணம் மடலேற்றம் முதலான தொழில்களைச் செய்தும், ஸம்ஶ்லேஷம் நேர்ந்தால் அந்த ரஸத்தை அநுபவித்துத் தாங்கள் இனியராகப் பேசுவதும் செய்வர். [ஆழ்வார்கள் தங்களை நாயகிகளாக நினைத்து இவ்வாறு செய்வது தகுதியா வென்பதை ஆராய்வோம். "ஆழ்வார்கள் எம்பெருமானுடைய பலவகை ப்ரபாவங் களைப் பாசுர முகமாகக் கூறி, அவனது உத்தமபுருஷத் தன்மையைக் கருதியதனாலே, அப்பொழுதே அவனைக் கிட்டவேண்டும்படியான ஆசை யுண்டாய், அங்ஙனம் அவனைக் கிட்டப் பெறாமையாலே ஆற்றாமை மீதூர்ந்து தளர்ந்து, அத்தளர்ச்சியாலே தாமான தன்மை யழிந்து ஆண் பெண்ணும்படியான நிலைமை தோன்றிப் பிராட்டி நிலைமையை அடைவர். இது கூடுமோ வென்னில்: "கண்ணிற் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்" "......................ராகவா உன் வடிவுகண்டால் மன்மதனும் மடவாராக ஆதரம் செய்வன்" என்ப வாதலாலே இது கூடும். அன்றியும்: தண்டகாரண்ய வாஸிகளான முனிவர் ராமபிரானது ஸௌந்தர்யாதிஶயத்தில் ஈடுபட்டுத் தாம் பெண்மையைப் பெற விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர்மங்கையராய்க் கண்ணனைக் கூடினர் என்ற ஐதிஹ்யமும் நோக்கத்தக்கது. "கண்ண னுக்கே யாமது காமம் அறம் பொருள் வீடிதற்கென் றுரைத்தான், வாமனன் சீலன் இராமானுசன் இந்த மண்மிசையே" என்பதன்

பொருளும் அறியற்பாலது. மேலும்: பரமாத்மாவினது தலைமையும், ஜீவாத்மாவினுடைய அடிமையும், ஜீவாத்மா பரமாத்மாவுக்கே உரியதாயிருக்கையும், புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலக முழுதும் பெண் தன்மையதாதலும், ஜீவாத்மாவினது ஸ்வாதந்த்ர்ய மின்மையும், பாரதந்த்ர்யமும், தாம் எம்பெருமானது சேர்க்கையால் இன்பத்தையும் பிரிவினால் துன்பத்தையும் அடைதலும், அவனையே தாம் கரணங்க ளெல்லாவற்றாலும் அநுபவித்து ஆநந்தித்தலும் முதலிய காரணங்களால், தம்மைப் பிராட்டிமாரோடு ஒக்கச் சொல்லத் தட்டில்லை. "ஆத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தாலும், அநந்யார்ஹ சேஷத்வாதிகளாலும் அந்வயத்தில் தரிக்கையும், வ்யதிரேகத்தில் தரியாமையும், ஜ்ஞாநம் விசதமானால் இவ்வாத்ம வஸ்துவும் பிராட்டிமாரோடு ஒக்கு மாகையாலும், இவர்களும் மயர்வற மதி நலமருளப் பெற்றவர்களாகையாலே பிராட்டி பேச்சாலே பேசுகிறார்கள்" என்னும் வ்யாக்யாந வாக்யம் இங்கு அறியத்தக்கது. ஶ்ருங்கார ரஸ ப்ரதாநமான அகப்பொருள் கிளவித் துறைகளை ஞான நூலாகிய திவ்ய ப்ரபந்தங்களில் கூறுதற்குக் காரணம், கடுத் தின்னுதானைக் கட்டி பூசிக் கடுத் தின்பிப்பார் போலச் சிற்றின்பம் கூறும் வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்பர். மடல் என்பது ஸ்வாபதேசத்தில் பரமபக்தியின் காஷ்டை. ஸந்யாஸ தர்மத்தை 'மடல்' என்று ஆளவந்தார் அருளிச் செய்தார்."] இவற்றுள் மடலூர்தலைக் குறித்துச் சிறிது பேசுவோம்.

நம்மாழ்வார் நாயிகாவஸ்தையை அடைந்து 'மாசறு சோதி'யில்:

"நாணுநிறையுங் கவர்ந்தென்னை நன்னெஞ்சம் கூவிக்கொண்டு
சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான் தன்னை
ஆணையென் தோழீஉலகுதோ றலர் தூற்றியாம்
கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே."

"யாமடலூர்ந்து மெம்மாழி யங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்
யாமடமின்றித் தெருவுதோ றயல் தையலார்
நாமடங்காப் பழிதூற்றி நாடு மிரைக்கவே."

என்று மடலூர்தலை அருளிச்செய்தார்.

'அங்கமலத் தடவயல்சூழ் ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன்' என்ற பெரும் புகழ்படைத்த பரகால நாயகியும், இம்மடலூர்தல் என்னும் துறையைச் சிறிய திருமடல் பெரிய திருமடல் என்னும் ப்ரபந்தங்களாக அருளிச் செய்துள்ளார்.

மடலிலக்கண விவரம்

"மடலேறலாவது—தலைவன் ஒவ்வாக் காமத்தினால் பனங்கருக்காற் குதிரையும், பனந் தருவின் உள்ளனவற்றால் வண்டில் முதலானவும் செய்து அக்குதிரையின் மேல் ஏறுவது. மடலேறுவான் திகம்பரனாய்

உடலெங்கும் நீறு பூசிக் கிழி ஓவியர் கைப்படாது தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவன் பெயரை வரைந்து கைப்பிடித்து, ஊர் நடுவே நாற்சந்தியிலே ஆகார நித்திரையின்றி, அக்கிழிமேற் பார்வையும் சிந்தையும் இருத்தி, வேட்கை வயத்தனாய், வேறுணர்வின்றி, ஆவூரினும் அழன் மேற்படினும் அறிதலின்றி மழை வெயில் காற்றுன் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங் கூடிவந்து 'நீ மடலேறுதியோ? அவளைத் தருதும்; சோதனை தருதியோ?' என்ற வழி, இயைந்தாளின் அரசனுக்கு அறிவித்து, அவனேவலால் அவன் இனைந்துநையத் தந்து 'மடலேறு' என்றவழி ஏறு முறைமை. வெண்பூளைப் பூ, எருக்கமுகை, எலும்பு, இவைகளாற் கட்டிய மாலையை அணிந்துகொண்டு அம்மாவிலேற, அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும் அவ்வுருளை உருண்டோடும் பொழுது பனங்கருக்கு அறுத்த விடமெல்லாம் இரத்தம் தோன்றாது வீரியம் தோன்றின் அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது; இரத்தங் கண்டுழி அவளைக் கொலை செய்து விடுவது" என்பது தஞ்சைவாணன் கோவை யுரை. இங்ஙனம் மடலூர்தலை:

"விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
ஒருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிந்தவி ரசைநடைப் பேதை
மெலிந்தில ளும்விடற் கமைந்த தூதே." [குறுந்தொகை-182]

[இதன் பொருள்] ["அழகு ஒழுகி விளங்கும் அசைந்த நடையையுடைய தலைவி நம்மிடத்து நெஞ்சம் நெகிழ்ந்திலள்; நாம் அத்தலைவியினிடத்து விடுத்த தூது, சிறந்த உச்சியையுடைய பனையின் கண் முதிர்ந்த பெரிய மடலாற் செய்த குதிரைக்கு மணிகள் அணிந்த பெரிய மாலையை முறைமையோடு அணிந்து, வெள்ளிய எலும்பை அணிந்துகொண்டு பிறர் இகழும்படி அம்மடல்மாவின் மேல் ஏறி ஒரு நாளில் பெருநாணத்தை விட்டுவிட்டுத் தெருவின் கண் செல்லவும் தருவதோ?"] என்பதனானும்,

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங் காழ்க் கொளினே." [குறுந்தொகை-17:]

[இ - ள்.] ["காமநோயானது முதிர்வுற்றால் பனைமடலையும் குதிரையெனக்கொண்டு ஆடவர் அதனை ஊர்வர்; குவிந்த அரும்பையுடைய *எருக்கம்பூ மாலையையும் அடையாள மாலையைப்போல் தலையில்

*மடலேறுவார் எலும் பணிந்து எருக்கங் கண்ணி சூடி நீறுபூசித் தெருவில்வருதலை:

"மங்கையர்தம் கண்ணன் மயங்கினர் வெள்ளெலும்பும்
துங்க வெருக்குந் தொடுத்தணிந்து—அங்கமெலாம்
வெந்தேறு சாம்பல் மிகவணிந்து வீதிதோறும்
வந்தேறி யூர்வர் மடல்." என்னும் பழம் பாடலால் அறியலாகும்.

அணிந்து கொள்வர்; வீதியில் பிறர் தம்மைக் கண்டு ஆரவாரம் செய்வர்; தம் கருத்து முற்றுதாயின் சாதலுக்குரிய வரை பாய்தல் முதலிய வேறு செயலையும் உடையராவர்.'']
என்பதனுலும் அறியலாம்.

"அறம்பொருள் வீடெனு மம்முக் கூற்றின்
திறங்கடிந் தரிவையர் திருத்துறு மின்பம்
பயனெனக் கலிவெண் பாவாற் றலைவன்
பெயரெது கையினிற் பேசுதல் வளமடல்.''

[இலக்கண விளக்கம்]

என்பது மடல் இலக்கணச் செய்யுள்.

மடலூர்வேனென்று கருதுதலும் சொல்லுதலும் மடலூர்தலும் ஆடவர்க்கே உரியன வென்றும், அவ்வாறு கருதிச் சொல்லுதல் மாத்திரமே மகளிர்க்கு உரியதெனவும் கூறுவர். இதனை:

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேற்
பொற்புடை நெறிமை யின்மை யான''

என்னும் தொல்காப்பியச் சூத்திரமும், அங்கு:

"கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சியார் கோமான்
வேட்டமா மேற்கொண்ட போழ்து.''

'என்றுராலோவெனின், இது மடலேற்றன்று; ஏறுவலெனக் கூறிய துணையேயாம்' என்ற நச்சினர்க்கினியர் உரையும் காணத்தக்கன. இது பற்றியே,

"..................................பெருந் தெருவே
ஊரா ரிகழினு மூரா தொழியேனன்
வாரார் பூம்பெண்ணை மடல்.''

"..................................உலகறிய ஊர்வன்நான்
முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த
மன்னிய பூம்பெண்ணை மடல்.''

எனும் இலக்கியங்கள் நமது பரகால நாயகி வாக்கின்றும் உண்டாயின.

மடலூர்தலைக் குறித்துத்
திருமடல் வ்யாக்யாநத்திற் காணப்படுவன

"மடலூருகைதான் உண்ணுதே குளியாதே உகந்த விஷயத்தை ஒரு படத்திலே லிகித்து அத்தைக் கொண்டு திரிகையும், அற விளைந்தால் அதின் காற்கடையிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக் கிடக்கையும், அங்ஙனே முடிகையும். இத்தால் ப்ரயோஜநம் என்னெனில்: அவன் கேட்கு மென்கையும், இல்லையாகில் இதுதானே ப்ரயோஜனமாகை. 'கடலன்ன காமத்தரராயினும் மாதர் மடலூரார் மற்றை

யார் மேல்' என்று சொல்லுகின்றதே யென்னில்: அது விதி நிஷேத வச நோக்கியன்று. ராகப்ராப்த மாகையாலே தோற்றார் மடலூரு மத்தனை. விதி நிஷேதமாகில் ராஜாஜ்ஞைக்கு நிற்கவேணும் காமம்.''

"சடக்கென மடலூராதே தோழிக்கு நின்று உத்தரம் சொல்லுவான் என்னென்னில்: 'வாவஶோ நாயஸௌஜிதே' என்றும், 'இரைக்குங் கருங்கடல் வண்ணன்' என்றும் சொல்லுகிறபடியே 'மடல்' என்ன, அக்கடல் பட்டது பட்டது அவன் வந்து தோன்றுமென்று பலகைப் புறத்தே பகட்டுகிறாள். தோழியும் இவள் சொல்லக் கேட்டுப் போது போக்குமளவில் அவன் வருமென்னு மத்தாலே 'சொல்லிக் காண்' என்கிறாள்'' என்பது பெரிய திருமடல் வ்யாக்யாநம்.

"இவருடைய பந்துக்களும் 'புனையிழைக ளணிவு மாடை யுடையும் புதுக் கணிப்பும் நினையும் நீர்மைய தன்று' என்னும்படி இருவர் வடிவிலேயும் வேறுபாடு கண்டு இருவரையும் காவல் செய்ய, அதுவே படியாக இவர்கள் ஆற்றாமை மூத மூாகமாகப் பணைக்க, எதிர்த் தலையைக் கிடையாமையாலே மற்றைத் தலை செய்யும் ஸாஹஸ ப்ரவ்ருத்தி யாயிற்று மடலாவது.''

"இவர்கள் மடலெடுக்கிறதற்கு ப்ரயோஜநம் என்னென்னில்: இவ்வுபக்ரமத்தைக் கண்டு இவர்களுடைய பந்துக்களும் கூட்டுதல்; அன்றியே இராஜாக்கள் கூட்டுதல்; அன்றியே இருவர் பந்துக்களும் இருவரையும் கைவிட, அலக்குப் போர் போல ஒருவர்க்கொருவர் தஞ்சமாய்க் கூடிப் போதல்; அன்றிக்கே: 'மடலெடுத்து எதிர்த் தலையைப் பெருமையாலே இத்தலை முடிந்தது' என்னும் ஏற்றத்தைப் பெற்றுப் போதல்; இவை ப்ரயோஜநமாக 'வளவேழுல'கில் தங்கள் அயோக்யதையை அநுஸந்தித்து அகலும் ஸ்வபாவரான இவர்கள் இஸ்ஸாஹஸ ப்ரவ்ருத்தியில் இறங்குவான் என்னென்னில்: மடலெடுத்து அத்தலையை அழிக்கப் புகுகிறார்கள் அல்லர்களே; 'ஊர்வன் மடல்' என்றும், 'வாவஶோ நாயஸௌஜிதே' என்று வில்லைக் காட்டி வேலையை அச்சுறுத்தினாற்போல அச்சுறுத்தி முகங் காட்டுவித்துக்கொள்ளுகிறவர்க ளாகையாலே, தங்கள் துணிவைச் சொல்லவே அவன் வருமென்று சொல்லுகிறார்க ளத்தனை யல்லது மடலெடுக்கிறார்கள் அன்றிறே............''

"கடலன்ன காமத்த ராயினும் மாதர், மடலூரார் மற்றையார் மேல்'' என்று ஸ்த்ரீகள் புருஷர்கள் மேல் மடலூரக் கட்வதல்லவென்று லக்ஷணங் காட்டிக் கிடக்கச் செய்தே, இப்பிராட்டி மடலூருவான் என்னென்னில்: ஆசை ஒரு தலைக்கேயாய், ஒரு தலை லக்ஷணப்படியே ஆசையை மர்யாதையிலே நடத்தலாமாகில் அது செய்யலாவது; ஆசை மிக்கார் மடலூரு மத்தனையென்னும் ஆர்ய (ஸம்ஸ்க்ருத) மர்யாதையாலே மடலூர உபக்ரமிக்கிறார்கள்'' என்பது சிறிய திருமடல் வ்யாக்யாநம்.

2/10/17

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 8 : பக்கம் 295-ன் தொடர்ச்சி]

ஸ்ரீ தேசிகன் விக்ரஹ ப்ரதிஷ்டை

இப்படியிருக்கும்போது பெருமாள் கோவில் ஸ்ரீ தூப்புல் ஸந்நிதிக்கு எதிரில் ஸ்ரீ. உப. ஐயா ரகுநாதாசார்யர் என்கிற ஸ்வாமி ஒரு மனையை வாங்கிச் சிறியதாக ஒரு கர்ப்ப க்ருஹம் கட்டி, அதில் வேறொரு தேசிக திவ்யமங்கள விக்ரஹத்தை ப்ரதிஷ்டை பண்ணவேணுமென்ற ஆஸ்தையுடன் வெள்ளியில் ஒரு கண்டையை (மணியை) எழுந்தருளப் பண்ணி, அதைத் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் திரு ப்ரதிஷ்டை செய்வித்து, அங்கேயே ஒரு மாஸம் ஆராதிக்கும்படி செய்து, அதை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து, அத்துடன் இன்னும் சில ப்ரக்ருதி த்ரவ்யங்களையும் சேர்த்து, ஸ்ரீ தேசிகன் திவ்யமங்கள விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி, 'அதை எங்கு ப்ரதிஷ்டை செய்யலாம்?' என்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில், கும்ப ஸங்க்ராந்தி திந ராத்ரியில் நம் ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸ்வப்நத்தில்

"பாத்ரே மாஸ்யவதீர்ணோ வேதாந்தாசார்ய ஸூரியாஸ"

[இது புரட்டாசி மாஸம்; ஸ்ரீ வேதாந்த தேசிகன் அவதரிக்கப் போகிறார்] என்று ஒரு உரத்த குரல் கேட்டதாகக் கண்டு, ஸ்வாமியும் தூக்கம் விழித்தெழுந்து இதென்னவென்று திகைத்து நிற்கும்போது, மறுதினம் உதய காலத்தில் அந்த ரகுநாதாசார்யரே வந்து, 'திருவெவ்வுளூருக்கு ஸ்வாமி எழுந்தருளி ஸ்ரீ தேசிகன் ப்ரதிஷ்டையை நடப்பித்து, ஸ்ரீ ராகவன் மங்களாசாஸநத்தையும் செய்துவைத்து, அந்தத் திவ்ய மங்கள விக்ரஹத்தை அடியேனுக்கு எழுந்தருளப்பண்ணிகொடுக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். ஸ்ரீ ஸ்வாமியும் ராத்ரி நேர்ந்த ஸ்வப்நத்தை அநுஸரித்து இந்தப் பாகவத நியமநம் இருப்பதைக் கண்டு வியப்படைந்து, உடனே திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி, மாசி மாஸம் ஜ்யேஷ்டா நக்ஷத்ரத்தில், அந்த விக்ரஹத்தை ஸ்ரீ ராகவன் ஸந்நிதி ஆராதகர்களான பட்டாசார்யர்களைக் கொண்டு பாஞ்சராத்ர முறைப்படி திருப்ரஷ்டை செய்வித்து, ரணபுங்கவ ஸ்தோத்ரம் முதலானவைகளால் ஸ்ரீ ராகவன் மங்களாசாஸநமும் பண்ணி, ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸந்நிதியில் நித்யாராதநம் பண்ணும்படியாயும், ஸ்ரீ ராகவன் புறப்பாட்டுக் காலங்களில் ஸ்ரீ தேசிகனுக்கு ஶடாரி ஸாதித்த பின்பு ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு ஶடாரி ஸாதிக்கும் படியும் நியமித்துவிட்டு, அங்குக் கொஞ்ச காலம் எழுந்தருளியிருந்தார்.

ஸ்வாமி செய்தருளிய ப்ரதிஷ்டையின் மஹிமை

அந்தத் தேசிகன்தான், அந்த ப்ரதிஷ்டையின் பலத்தாலும், ஸ்ரீ ராகவனுடைய மங்களாசாஸந பலத்தாலும், இப்போது திரு வல்லிக்கேணியில் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸமஸ்த விபவங்களுடன் புரட்டாசி மாஸத்தில் திருவவதார மஹோத்ஸவத்தில் உபய கோஷ்டி களுடன் பத்து நாட்களும் இரண்டு வேளையும் திருவிதிகளை அலங் கரித்து, விசேஷ தளிகைகளும் கண்டருளி, பத்தாம் நாளில் வெகு அழகாகப் புறப்பாடும் சாற்றுமுறையும் கண்டருளுகிறார். அன்றைய தினம் ஆயிரக்கணக்கான பாகவதர்களுக்குத் ததீயாராதநமும் கோஷ்டி களுக்கு விசேஷ ஸம்பாவனையும் நடைபெறுகின்றன. இவ்வளவுக்குங் காரணம் பிம்பங்களுக்கு

“ ஸாந்நித்யம் கரோதி யதாவத் ப்ரதிஷ்டா |
மஹாபாகவதஸ்பர்ஶம் வாமிநேத்ர்யப்ரதிஷ்டா ||”

என்கிற வசநத்திற்குப் பொருளான “திருப்ரதிஷ்டையில் மஹா பாகவத ஸ்பர்ஶம் போலவும்” என்று அந்த மஹாதேசிகனலேயே கொண்டாடப் பட்ட இந்த நம் ஸ்வாவாமியின் பரிசுத்தமான கரஸ்பர்ஶமே என்பது ஸர்வ ஸம்மதம்.

திருவேங்கடமுடையான் மங்களாசாஸநம்

அங்கிருந்து ஸ்ரீபெரும்பூதூர் பாஷ்யகாரரையும், பூவிருந்தவல்லி யில் திருக்கச்சி நம்பிகளையும், திருநின்றவூரில் ஸ்ரீ பத்தராவியையும், திருமழிசையில் பக்திஸாரரையும் மங்களாசாஸநம் செய்துகொண்டு, மறுபடியும் ஸ்ரீ தேவப்பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி அவ்விடத்தில் ஸங்கல்பத்தை நடத்திக்கொண்டு, உத்தாந காலத்தில் திருவெவ்வுளூர் எழுந்தருளி, பின் நாகலாபுர மார்க்கமாய் நாராயணபுரம், திருச்சானூர், கீழைத் திருப்பதி முதலிய இடங்களில் மங்களாசாஸநம் செய்துகொண்டு திருமலை எழுந்தருளித் திருவேங்கடமுடையானை ஸேவித்து விட்டுத் திருச்சானூரில் ஆஶ்ரமத்திற்கு ஸமீபத்திலிருக்கும் பெருமாள் ஸந்நிதி யில் கொஞ்ச காலம் எழுந்தருளியிருந்து, அடிக்கடி திருமலைக்கு எழுந் தருளித் திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுதுவிட்டு, அதே திநத்தில் ராத்ரி திருச்சானூருக்கு எழுந்தருளிக் கொண்டிருந்தார். அந்த ஸமயம் மார்கழி மாஸம் சுக்ல பக்ஷ ஏகாதசியில் திருமலையில் திரு வேங்கடமுடையான் வஜ்ராங்கி ஸமர்ப்பித்துக் கொள்ளும் வழக்க மாகை யால், அப்போதும் திருமலைக்கு எழுந்தருளித் திருவேங்கடமுடையானை அநுபவித்து, மறுதினம் த்வாதசியில் ஸ்ரீஸ்வாமி புஷ்கரிணியில் நீராட்டம் செய்து நித்யகர்மாநுஷ்டாநங்களைப் பாரணாந்தமாக முடித்துக்கொண்டு திருவெவ்வுளூருக்கு எழுந்தருளுவதாக நியமநம் பெற்று, ஸ்ரீ ஆண்டா ளுடைய போகி திருக்கல்யாணத்திற்குத் திருவெவ்வுளூருக்கு எழுந் தருளினார்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹாஸ்தாந நிர்வாஹம்

அப்போது ஸ்ரீ அஹோபில மடத்தில் 36-வது பட்டத்தில் ஆஸ்தாந நிர்வாஹம் செய்துகொண்டிருந்த அழகியசிங்கர் திருநாட்டுக் கெழுந்தருளவே, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனும், விளம்பி௵ தைமீ 10௳ சுக்ல ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை ரோஹிணீ நக்ஷத்ரம் கூடிய சுப திநத்தில் ஸ்வாஶ்ரிதர்கள் எல்லோரையும் ஒரு பெரும் பரிஷத்தாகப் பெரும்பாக்கம் அக்ரஹாரத்தில் சேர்த்துத் தாமும் அவர்களிடம் அநு ப்ரவேசித்து, அவர்கள் அனைவரையும் ஏகமுகமாக்கி, நம் ஸ்ரீ ஸ்வாமி யைத் தம்முடைய ஆராதநத்தை ஏற்றுக்கொண்டு ஆஸ்தாந நிர்வாஹம் செய்து வரும்படி நியமித்தருளினன். இப்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பரிஷந்முகமாக நியமித்திருப்பதை ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞா பநம் செய்து, ஸ்ரீ ஸ்வாமியைப் பெரும்பாக்கத்திற்கு எழுந்தருளப் பண்ணவேண்டியதற்காகத் திருக்குடந்தை பெரிய தெரு ஸ்ரீ சக்ரவர்த்தி ஸ்வாமி (38-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாஶ்ரமத் திருநாமம்) ஸ்ரீ. உப. தட்டை ரங்காசார்யர், பருத்திப்பட்டு வங்கீபுரம் ஸ்ரீ வேங்கடா சார்யர் முதலான பெரியோர்கள் திருவெவ்வுளூருக்கு வந்து ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்து, ஸ்ரீஸ்வாமியை அப்போதே ஸ்ரீராகவன் மங்களாசாஸநத்திற்கு ஸந்நிதி பிருதங்களுடன் எழுந்தருளும்படி ப்ரார்த் திக்கும்போது, இவ்வளவும் ஆதிமுதல் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய ப்ரயத்ந பலமாக ஸ்ரீ ஸ்வாமிக்குத் திருவுள்ள மாகையால், அந்த மஹா தேசிகனை முன்னிட்டுக்கொண்டே தாம் மங்களாஶாஸநத்திற்கு எழுந்தருளுவதாக நியமித்து, அந்த மஹா தேசிக னுக்குத் திருப்பல்லாக்கில் சாத்துப்படி ஸமர்ப்பித்துக் கண்ணன் ஸந் நிதியிலிருந்தே எழுந்தருளி, சத்ர சாமராதி ஸகல மர்யாதைகளும் அந்த மஹா தேசிகனுக்கே நடக்கும்படி செய்து, மங்களாஶாஸநத்தை முடித்துக்கொண்டு, மறுதினமே புறப்பட்டுப் பெரும்பாக்கத்துக்குப் பரிமித சிஷ்யர்களுடன் எழுந்தருளினர். ஐந்தாறு நாட்களுக்குள் ளாகவே அதிவேகமாக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளி யிருக்கிற பெரும்பாக்கம் க்ராமத்திற்கு எழுந்தருளி, அந்த க்ராமத்திற்குத் 'தக்ஷிணஹோபிலம்' என்று திருநாமத்தைச் சாற்றி, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியையும் கிட்டி, சாரீரக ஸுப்ரபாதாதிகளைக் கொண்டு மங்களாசாஸநம் செய்து, அபிகமநாராதநத்தைத் தொடங்கி, திருப்பாவை முதலான ஸ்ரீ ஸூக்திகளையும் ஸேவிக்கும்படி செய்து, ஆராதநத்தை முடித்துக்கொண்டு ஹம்ஸ முத்ரையையும் பெற்று ஆஸ்தாந நிர்வாஹத்தை அங்கீகரித்தருளினர்.

திருவெவ்வுளூர் மங்களாசாஸனம்

இப்படி இரண்டு மூன்று திநங்கள் ஆராதநம் செய்தருளியபின், திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவனுடைய தை மாஸத்திய உத்ஸவத்தை ஸேவிக்கத் திருவுள்ளங்கொண்டு, ஸ்ரீந்ருஸிம்ஹனைச் சிறியதொரு பல்லக் கில் பக்ஷிகள் (ஸ்வாமிகள்) மூலம் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு பரிவா

ரங்களுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹன்பின் அநுயாத்ரையாக எழுந்தருளும்போது, சிஷ்யர்கள் பலர் ஒன்றுகூடிப் பல்லக்கில் எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க அதைத் திருவுள்ளம் பற்றுமல் அநுயாத்ரையாகவே எழுந்தருளி, அங்கங்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு விசேஷாராதநத்துடன் ஸ்ரீ மதுராந்தகம் எழுந்தருளி, அங்கே கோதண்ட ராமனையும் ஸ்ரீ ஜநக வல்லித் தாயாரையும் ஸ்ரீ உடையவரையும் திருவடிதொழுது ஸகல மர்யாதைகளையும் பெற்றுக்கொண்டு, தைமீ அமாவாஸ்யை திநத்தில் திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி ஸ்ரீ வீரராகவனை மங்களாசாஸநம் செய்து அநந்தகொத்து பரிஜநங்களாலும் தங்கள் தங்கள் அதிகார நிவேதந புரஸ்ஸரமாய்த் தொழப்பட்டு, அன்று ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதியில் ஸ்ரீ ந்ருஸிம்ஹாராதநத்தைச் செய்தருளி, மறுதினம் முதல் மடத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணி விசேஷாராதநம் கண்டருளும்படி செய்தார்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு ஸஹஸ்ர கலஶாபிஷேகம்

பின் ஸ்ரீ வீரராகவனுக்கு அவப்ருத ஸ்நாநம் முடிந்ததும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு மார்க்கத்தில் எழுந்தருளியதால் உண்டான விடாய்தீர ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் சொல்லியபடி ஸஹஸ்ர கலஶாபிஷேகத்தைச் செய்தருளி விசேஷாராதநத்தையும் பண்ணி, பரிஜனங்களுக்கும் வித்வான்களுக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனே பஹுமாநம் பண்ணுவதாகத் திருவுள்ளம்பற்றி, மாத்ரா தாந காலத்தில் சுமார் ஆயிரம் ரூபாய்களை ஸமர்ப்பணம் செய்து, அந்த ரூபாய்களைக் கொண்டே வஸ்திரங்களை வாங்கி அவரவர்களின் அதிகாராநுகுணமாக ஸம்பாவனைகள் செய்தருளினர். இந்த க்ரமத்தை அநுஸரித்தே எப்போதும் திருவாராதநத்தில் மாத்ரா தாந காலத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட த்ரவ்யத்தைக் கொண்டே நித்யப்படி ஆராதகர்களுக்கும் வருகிற வித்வான்களுக்கும் ஸம்பாவனை பண்ணும் வழக்கம் ஏற்பட்டு, அவ்வழக்கம் இன்றைக்கும் நடந்தேறி வருகின்றது.

தக்ஷிண தேச யாத்ரை

அப்போது மாசிமீ 12உ ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேக ஸ்ரீ முகம் நாநாதேச சிஷ்யர்களுக்கு அனுப்பப்பட்டது. பின் விகாரிஷூ சித்திரைமீ வரையில் ஸ்ரீ ஸ்வாமி திருவெவ்வுளூரிலேயே எழுந்தருளியிருந்து, பின் ஸ்ரீ ஆழ்வார் திருநகரி சென்று நம்மாழ்வாரைத் திருவடி தொழவேண்டும் என்கிற அதிகமான அபிநிவேசத்துடன் அவ்வர்ஷம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்குத் திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளவேண்டுமென்று தீர்மானித்து யாத்ரை ஸங்கல்பித்துக்கொண் டெழுந்தருளும்போது, பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி ஸ்ரீ தேவப்பெருமாள் மங்களாசாஸநத்திற்காக அபேக்ஷித்தபோது, அப்போது அந்த ஸந்நிதி அதிகாரிகளுக்கும் அர்ச்சகர்களுக்கும் ஏதோ மநஸ்தாபமிருந்தபடியால், அவ்வதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதிக்கு வந்து 'இந்த ஸமயம் ஸந்நிதிக்கு மங்களாசாஸநத்திற்கு எழுந்தருளினால் மர்யாதைகள் ஸரியாக நடைபெறுமல் போவதுடன் தங்களுக்கும் மிகுந்த மாநஹாநியேற்படும், என்றும் விஜ்ஞாபித்தபடியால் அதை அநுஸரித்து அந்த ஸமயம் மங்களாசாஸநம் செய்தருளாமலேயே மிகக் குறையுடன் தூசி மாமண்டூர் மார்க்கமாகத் திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளியாயிற்று.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமான

அடைக்கலப்பத்து

[வேதாந்தசிரோமணி நெடுந்தெரு. ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர் இயற்றிய பதவுரை விசேஷ உரைகளுடன்]

தனியன்

லக்ஷ்மீந்ருஸிம்ஹமநுசிந்த்ய தயாம்புராஶிம்
லக்ஷ்மீம் ததங்கஸரஸீருஹராஜஹம்ஸீம் |
லக்ஷ்மீவ்யகார நரஸிம்ஹபதப்ரபத்திம்
யஸ்தம் ஶடாரியதிராஜமுனீந்த்ரமீடே ||

பதவுரை:—தயாம்புராஶிம் - கருணைக் கடலாகிய, லக்ஷ்மீந்ருஸிம்ஹம் - ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹப் பெருமாளையும், ததங்கஸரஸீருஹராஜஹம்ஸீம் லக்ஷ்மீம் - அவன் மடி என்னும் தாமரையில் ஹம்ஸப்பேடுபோல் நித்யவாஸம் செய்யும் பெரிய பிராட்டியையும், அநுசிந்த்ய - ஆலோசித்து, நரஸிம்ஹபதப்ரபத்திம் - லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவடிகளில் அடைக்கலம் புகும் வழியை, யோ லக்ஷ்மீவ்யகார - யாவரும் அறிந்து செய்யும்படி பாசுரங்களின் மூலமாக எவர் வெளியிட்டாரோ, தம் - அந்த, ஶடாரியதிராஜமுனீந்த்ரம் - ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜயதீந்த்ர மஹா தேசிகனை, ஈடே - துதிக்கிறேன்.

கருத்து :—நாம் எத்தனையோ பிறவிகள் எடுத்து ஒவ்வொரு பிறவியிலும் அளவற்ற பாபங்களைப் பண்ணினவர்களாக இருந்தபோதிலும், சரணம் புகுந்த மாத்ரத்தில் அவ்வளவு பாபங்களையும் பொறுத்து அபயம் அளிக்கும்படி சிபார்சு செய்வதற்கு ஜகந்மாதாவான பெரிய பிராட்டியாரானவள் மடியில் நித்யவாஸம் செய்வதாலும், அப்படியே எல்லாக் குற்றங்களையும் மன்னித்து அபயம் அளிக்கும்படியாக லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கருணை ஸமுத்ரமாய் இருப்பதாலும், அவன் திருவடிகளில் அடைக்கலம் புகுவதே ஸகல க்ஷேமங்களை அடைவதற்குச் சிறந்த வழி என்கிற திருவுள்ளத்துடன் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிகளில் அடைக்கலம் புகும் வழியை "ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து" என்கிற தமிழ் ப்ரபந்தத்தின் மூலமாய் வெளியிட்ட ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனை (34-ம் பட்டம் ஸ்வாமியை) ஸ்தோத்ரம் செய்கிறேன் என்பதாம்.

திருமந்திரத் திருப்பதியாம் மதுராந்தக நகருள்
*உருவந்துறை யரங்கேச சடகோப முனியருளால்
பெருமந்திர வுரைசுரந்த சடகோப யதிபதிசெய்
திருவந்துறை மடியுடையா னடைக்கலப்பத் திதுவே.

பதவுரை :—திருமந்திரம் திருப்பதியாம் - திருமந்த்ரம் விளைந்த க்ஷேத்ரமான, மதுராந்தக நகருள் - மதுராந்தக மென்னும் பட்டணத்தில், உருவந்துறை - தேஹாவ

---

* உருவந்தரி என்று பாடாந்தரம்.

ஸாநத்தை அடைந்தவரான, அரங்கேச சடகோப முனி - ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ரங்க நாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய (2.-ம் பட்டத்து ஸ்வாமி), அருளால் - க்ருபையினலே, பெரு மந்திர உரை சுரந்த - அஷ்டாக்ஷரம் முதலிய மஹா மந்த்ரங் களுடைய அர்த்தத்தை அறிந்தவரான, சடகோப யதிபதி - ஸ்ரீவண் சடகோப ஸ்ரீசடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய, செய் - அருளிச்செயலான, திரு வந்து உறை மடியுடையான் அடைக்கலப்பத்து - மஹா லக்ஷ்மியானவள் தானே விரும்பிவந்து நித்யவாஸம் செய்யும் மடியை உடையவனை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனி டத்தில் சரணுகதி செய்யும் வழியைத் தெரிவிப்பதால் 'ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து' என்ற பெயர் கொண்ட, இதுவே - இந்த ப்ரபந்தமே (முமுக்ஷுக் களான யாவரும் அநுஸந்திக்கத் தகுந்தது.)

குறிப்பு :—'உருவந்தரி' என்கிற பாடத்தில் ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவம் பெற்ற; அதாவது : மோக்ஷம் பெற்ற என்று அர்த்தம்.

ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பெரிய நம்பிகள் மதுராந்தக மென்னும் க்ஷேத்ரத்தில் மந்த்ரோபதேசம் செய்தருளி அவர் மூலமாக ஸகல ஸ்ரீ வைஷ்ணவ உலகமும் மந்த்ரோபதேசம் பெற்று வாழ்வதால், மதுராந்தக நகரானது திருமந்த்ரம் விளைந்த க்ஷேத்ரம் என்று பெரியோர்களால் கூறப்படுகிறது. (இந்த க்ஷேத்ரத்தில் 28-ம் பட்டம் ஸ்வாமியின் ப்ருந்தாவநம்.)

கருத்து:—இந்த அடைக்கலப் பத்தானது மதுராந்தகத்தில் பரமபதம் பெற்ற ஸ்ரீ திருக்குறுங்குடி அழகிய சிங்கர் என்னும் மஹானிடத்தில் (28-ம் பட்டம் ஸ்வாமி) காலக்ஷேபம் செய்து அதனல் மிகவும் ஜ்ஞாதாவாகவும், மதுராந்தக மென்னும் க்ஷேத் ரத்தில் மேற்கூறிய மஹானிடத்திலிருந்து மந்த்ரம் மந்த்ரார்த்தம் இவைகளின் உப தேசத்தைப் பெற்றதால் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸமானமாக எழுந்தருளியிருந்த அத் திப்பட்டு ஸ்ரீ அழகிய சிங்கரால் (34-ம் பட்டம் ஸ்வாமியால்) அருளிச்செய்யப்பட்ட தாகையால் வக்தாவின் (நூலாசிரியரின்) ஏற்றமும், லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடி களில் அடைக்கலம் புகும் வழியைத் தெரிவிப்பதால் விஷயத்தின் ஏற்றமும், அதி விஸ்தாரமாக இல்லாமலும் ஸ்த்ரீ சூத்ராதிகளும் அநுஸந்திக்கத்தகுந்த தமிழ் மொழி யில் இருப்பதால் ப்ரபந்தத்தின் ஏற்றமும் பெற்றிருப்பதால், யாவரும் முதலில் இதை அருளிச்செய்த அத்திப்பட்டு மஹா தேசிகனை வணங்கிவிட்டு இந்த ப்ரபந்தத்தை அநுஸந்தித்து க்ருதார்த்தர்களாகக் கடவர் என்பதாம்.

முதல் பாசுரத்தின் அவதாரிகை :—ஜகத் காரண பூதனை ஸ்ரிய:பதியும், உபாய தசையிலும் உபேய தசையிலும் அவனைப் பிரியாத ஜகந் மாதாவான பெரிய பிராட்டியும், அநாதி காலமாக அநந்தாபராதம் பண்ணி ஸம்ஸார மண்ட லத்தில் வருந்திக்கொண்டிருக்கிற நாம் தங்கள் திருவடிகளை வணங்கி அபயம் அபேக்ஷிக்கும் ஸமயம் பார்த்து நமக்கு நித்ய ஸூரிகளுக்கு ஸமானமான ப்ரும் ஹாநந்தத்தைக் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும் என்கிற தயாமூல ஸங்கல்பத்தாலே, ஒருவராலும் தங்களைப் பிரித்தெடுக்க முடியாவண்ணம் மாஷோவமாஷமாக ஒருவர்க்கொருவர் ஆலிங்கநம் செய்துகொண்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மூர்த்தியாக ஸ்ரீமதஹோபிலத்தில் உள்ள கருடாசலத்தில் ஸ்ரீ வைகுண்டத்தினின்று வந்தவ தரித்து எழுந்தருளியும், இவ்விதம் தாங்கள் ப்ரஜைகளுடைய அபய ப்ரார்த்தனையை வேண்டிவந்து நிற்கும் நிலையை ப்ரஜைகளுக்குத் தெரிவிப்பதற்காக ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனை அவதரிப்பித்து, ஸ்வாமியின் மூலமாகத் தங்களுடைய அபயப்ரதாந ஸங்கல்பத்தை உலகத்தில் வெளியிட்டும், நிர்ஹேதுக மாகத் தமக்கு உபகரித்தருளின மஹா குணத்தை முதல் பாசுரத்தில் அநுஸந்தித்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஶரணம் பற்றுகிறார்.

நூல்

1. மாமலராள் மன்னியுறை மடியுடையான் மஞ்சுறையும்
மாமலையில் தனியிலகு மாகுருவாய் மனுவரத்தை
மாமறையோர் வானவர்க்கும் வழங்கியருள் மாமுனியாம்
மாமதிசேர் நரசிங்கன் மலரடியை மன்னினனே.

பதவுரை :—மாமலராள் மன்னி உறை மடியுடையான் - பத்ம வாஸிநியான பெரிய பிராட்டியாரால் ஒருவர்க்கும் பிரித்தெடுக்க முடியாதபடி ஸ்திர ப்ரதிஷ்டிதமாய் எப்பொழுதும் வாஸம் செய்யும் மடியை யுடையவனும், மஞ்சு உறையும் மாமலையில் - மேகங்கள் வந்து தங்கும்படி (உயரமும் அகலமும் வாய்ந்து) பெரியதாயிருக்கும் (கருடாசலம் என்னும்) மலையில், தனி இலகு மா குருவாய் - (தனக்கு ஒத்தார் மிக்கார் இல்லாதபடி) அத்விதீயமாய் விளங்கும் மஹா குருவாய் வந்து, மனு வரத்தை - ஸந்யாஸாஶ்ரம ஸாதகமாய் மந்த்ரோத்தமமா யிருக்கும் ப்ரேஷ மந்த்ரத்தை, மா மறையோர் வானவர்க்கு - ப்ருஹ்ம வித்துக்களில் சிறந்தவரான * ஸ்ரீநிவாஸாசாரியர் என்னும் மஹானுக்கு, வழங்கி அருள் மா முனியாம் - உபதேசித்தருளுவதற்காக ஸந்யாஸி ரூபமாய் எழுந்தருளினவனும், மா மதி சேர் - [ஸ்ருஷ்டி காலத்தில் 'பஹுஸ்யாம் ப்ரஜாயேய' என்கிற (தேவாதி சரீரகனாக ஆவதற்காக மஹதஹங்காராதி சரீரகனாக ஆவேன்) என்கிற] பெரியதான ஸங்கல்ப ரூப ஜ்ஞானத்துடன் கூடினவனாய் ஜகத் காரண வஸ்துவாயும் இருக்கும், நரசிங்கன் - ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய, மலர் அடியை - தாமரைபோன்ற திருவடிகளை, மன்னினன் - ஹ்ருதயத்தில் எப்பொழுதும் ஸ்திரமாக இருக்கும்படி த்யானித்தேன். [ஏ - அசை.]

குறிப்பு:—இப்பாசுரத்தில், "மாமலராள் மன்னியுறை மடியுடையானான மாமுனியாம் நரசிங்கன்" என்கிற ரஸோக்தியால் வாமநாவதாரத்தில் ப்ரும்ஹசர்யாஶ்ரமத்திலும், பிராட்டியானவள் திருமார்பை விட்டு 'அகலகில்லேன் இறையும்' என்று எழுந்தருளி யிருந்ததுபோலவே, ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு ப்ரேஷமந்த்ரோபதேசம் செய்வதற்காக ஸந்யாஸியாக எழுந்தருளியபோதும், பிராட்டியானவள் பெருமாளை விட்டு அகலாத நிலைமை ஸூசிதமாகிறது.

கருத்து :—ஆர்த்ராபராதிகளான நமக்கு எம்பெருமானுடைய கடாக்ஷமானது தகுந்த சிபார்சு அன்றியில் கிடைப்பது அரிதாகையால், அவ்விதம் சிபார்சு செய்வதற்காக ஜகந் மாதாவான பெரிய பிராட்டியானவள் ஒருக்ஷணம் கூட ஒருவராலும் பிரித்தெடுக்க முடியாதபடி இந்த லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தினுடைய மடியில் நித்யவாஸம் செய்வதாலும், இவ்வுலகத்திலுள்ள தன் ப்ரஜைகள் தன்னைச் சரணடைந்து நற்கதி பெற்று வாழவேண்டு மென்கிற திருவுள்ளத்தாலே இவ்வெம்பெருமான் ஸ்ரீமதாதிவண் சடகோ யதீந்த்ர மஹா தேசிகனுக்கு ஸேவை ஸாதித்து, அவருக்கு ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசித்து, அவரை ஸந்யாஸியாக்கி, லோகாசார்யனாகச் செய்தருளி, 'எதிர் சூழல்புக்கு' என்கிற கணக்கிலே, உலகத்திற்காகப் பாடுபட்டவனாகையாலும், ஆதியில் ஸ்ருஷ்டி காலத்தில் 'பஹுஸ்யாம்' என்று ஸங்கல்பித்து இந்த ஜீவராசிகளுக்குக் கரண களேபரங்களைக் கொடுத்து உதவின ஜகத் காரணப் பொருள் இந்த லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனே யாகையாலும், 'காரணம் து த்யேய:' என்கிற உபநிஷத்தின் கட்டளையின்படி இவ்வெம்பெருமானுடைய சரணாரவிந்தங்களை உபாயமாகப் பற்றுவதே ஸகல க்ஷேமலாபத்துக்கும் சிறந்த வழி என்பதாம். [தொடரும்]

* ஸ்ரீநிவாஸாசார்யர் என்பது, ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய பூர்வாஶ்ரம திருநாமம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

இவ்வர்ஷத்து உபாகர்மாவைக்குறித்து ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமநம்.

நமது ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் 8-வது ஸஞ்சிகையில் 304-வது பக்கத்தில் ஸ்ரீ. உப. P. B. ரங்காசார்ய ஸ்வாமி (அட்வொகெட், கூடலூர்), "த்ருக்ஸித்தாந்த ப்ரகாரம் சுக்ர மௌட்யமில்லாததனால் ஆவணிமீ" 28உயே உபாகர்மம் அநுஷ்டிப்பது சரியென்று தீர்மானித்து ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளத்தை மாற்றமுடியுமானால் நல்லது" என்று எழுதியிருக்கிறார். இதற்கு ஸமாதாநமாவது :—

நமது பெரியோர்கள் வாக்யபஞ்சாங்கத்தைத்தான் அநுஷ்டிப்பது வழக்கம். த்ருக்ஸித்தாந்த பஞ்சாங்கம் நமக்கு உபாதேயமன்று. தர்மஶாஸ்த்ர மெல்லாம் வாக்யத்தையே ஒட்டினது. ஆதலால் த்ருக்ஸித்தாந்தம் அநாதரணீயம். மேலும், த்விதீயாத்யுபாகர்மங்களுக்கு எப்பொழுதும் தோஷமில்லை. ப்ரதம உபாகர்மத்துக்காகத்தான் இவ்வளவு விசாரமும் செய்யப்படுகிறது. ஆதலால் எல்லா உபாகர்மாக்களும் ஆடிமீ" 30உயே அநுஷ்டிக்கப்படவேண்டும். இது முதல் ஸமாதாநம்.

இரண்டாவது ஸமாதாநமாவது: த்ருக்கணிதத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டாலும், ஆநந்தபோதிநி த்ருக்கணித பஞ்சாங்கத்தில் சுக்ரன் 14உ அஸ்தமநமென்றும் 25உ 52. 57க்கு உதயமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது: 26உ தான் நாள் கணக்காகிறது. 26, 27, 28, இம்மூன்று திநங்களிலும் சுக்ரன் பாலன். ஆதலால்,

> "குருபார்கவயோர்பால்யே வார்த்தக்யே வா(அ)ஸ்தகே(அ)பி வா |
> யஜ்ஞோபாக்ருதிநுஸ்ராஸ: ||"

என்கிற வசநப்படி சுக்ரபால்யத்திலும உபாகர்மம் நடத்தக்கூடாது. ஆதலாலும் ஆடிமீ" 30உயே உபாகர்மம் நடத்தப்படவேண்டும். ஸ்ரீ நியமநப்படி :

அம். வ. நரஸிம்ஹா சார்யர் [ஸ்ரீகார்யம்]

[இது விஷயமாகக் கூடலூர் ஸ்ரீ. உப. P. B. ரங்காசார்ய ஸ்வாமி மறுபடியும் ஒருகடிதம் எழுதி இருக்கிறார். அதில் அவர், வாநஶாஸ்த்ரத்தில் நூதந ஆராய்ச்சிகள் பல செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் அவைகளில் அநேக புதிய ஜ்யோதிர்விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அப்படிப்பட்ட விஷயங்கள் தெரியாதகாலத்தில் 'வாக்யம்' ஏற்பட்டதென்றும் எழுதிவிட்டு, இப்படிப் பஞ்சாங்கங்கள் பேதித்தால் தர்மாநுஷ்டாநங்களில் க்ஷோபம் ஏற்படுமாகையால், இதைப்பற்றி நமது பண்டித சிகாமணிகளெல்லாரும் ஒன்று சேர்ந்து குண தோஷம் விசாரம் செய்து ஒரு நிர்ணயத்தைச் செய்தால், அது ஜகத்திற்குப் பெரியதொரு உபகாரமாகுமென்று வற்புறுத்துகிறார். அப்படி வித்வத் ஸங்கமொன்றைச் சேர்த்து இந்தப் பெரிய விஷயத்தில் ஒரு நிர்ணயத்தை ஸர்வஸம்மதமாகும்படி ஏற்படுத்துவதற்கு ஸ்ரீ அழகிய சிங்கரைப்போன்ற மஹா வித்வாங்களாகிற மடாதிபதிகளே தகுந்த அதிகாரிகளாகிறபடியால், ஸ்ரீஅழகிய சிங்கரிடம் இந்தப் பத்ரிகாத்வாரா

இந்த விண்ணப்பத்தைச் செய்யத்துணிந்ததாகவும் எழுதி இருக்கிறார். இது பெரியதொரு சீர்திருத்தமாம்; இந்தச் சீர்திருத்தத்தை இந்த மடத்தில் ஏற்படுத்தினல் மற்றை மடாதிபதிகளும் அதை ஏற்படுத்திவிடுவார்கள் என்பது அவருடையநம்பிக்கை. ஸம்.

---

(2)

ஸ்ரீமதஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம் கல்யாணாபிவ்ருத்திஸபா.

இச்சபையானது இக்கலாசாலையில் அத்யக்ஷராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமாந். உ.வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின் கீழாரம்பிக்கப்பட்டது. அப்போது டி. வேதாந்தம் என்னும் வித்யார்த்தி காரியதர்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் அவ்வப்போது கலாசாலை உபாத்தியாயர்களின் அக்கிராஸனத்தின் கீழ் வித்யார்த்திகளுடைய உபந்யாஸபடநங்களும் விசாரங்களும் நடந்து சபை நடைபெற்றுவருகின்றது.

நடந்த வருஷத்தில் முதலில் திருக்கோட்டியூர் ஸ்வாமிகளினக்கிராஸனத்தின் கீழ் வித்யார்த்திகளின் அவச்ய கர்த்தவ்யமென்பதைக் குறித்து ஷை ஸ்வாமிகளாலே உபந்யஸிக்கப்பட்டது. பிறகு கலாசாலை உபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. ஏ. ஆர். க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின் கீழ் டி. வேதாந்தம் என்னும் வித்யார்த்தியினல் பக்தி: என்னும் விஷயத்தைக்குறித்து உபந்யாஸம் படிக்கப்பட்டது. பிறகு இக்கலாசாலை அத்யக்ஷராக எழுந்தருளின ஸ்ரீமான் உ. வே. தேவனார் விளாகம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமிக்கு பொருட்டு ஸ்வாகதபத்ரிகை ஸபையின் வாயிலாக ஸமர்ப்பிக்கப்பட்டது. அப்போது அந்த ஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின்கீழ் வித்யை என்னும் விஷயத்தைக்குறித்து உபந்யாஸம் படிக்கப்பட்டது. பிறகு கலாசாலை மானேஜராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமிகளின் ஸந்நிதியில் ஸ்வாகத நிவேதனம் செய்யப்பட்டது. அப்பொழுது கலாசாலை அத்யக்ஷர் ஸ்ரீ. உ. வே. லக்ஷ்மீநரஸிம்மாசாரியர் ஸ்வாமிகள் அக்கிராஸனம் வஹித்தார்கள். உ. வே. வாஸுதேவாசார்யஸ்வாமிகளினல் வித்யார்த்திகளின் முறை என்பதைக் குறித்து வெகுஅழகாக உபந்யஸிக்கப்பட்டது.

இவ்வருஷம் முதலில் ஷை சபைக் கார்யதர்சியாக உழப்பாக்கம் ராஜகோபாலன் என்றும் வித்யார்த்தி தேர்ந்தெடுக்கப்பட்டு கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ. உ. வே. நாராயணசார்யர்ஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின் கீழ் டி. வேதாந்தம் என்னும் வித்யார்த்தியினல் ஸாஹஸம் என்பதைக் குறித்தும் பிறகு உபாத்தியாயர் ஸ்ரீ. உ. வே. ஆர். க்ருஷ்ணமாசார்யர்ஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின் கீழ் மூடூர் வரதாசாரியென்னும் வித்யார்த்தியால் "ஸம்ஸ்க்ருதஸ்யேதாநீந்தநாவஸ்திதி:" என்பதைக்குறித்தும் உபந்யாஸங்கள்படிக்கப்பட்டன. இவ்விதம் உபந்யாஸங்களுடனும் விசாரங்களுடனும் பக்ஷந்தோறும் சபையானது இனிதே நடந்துவருகிறது. இச்சபையின் சார்பாக வாசகசாலையொன்றேற்படுத்தப்பட்டு அதன்வாயிலாக தினமணி உத்யானபத்திரிகை தேசிகஸூத்திரம் முதலிய பத்திரிகைகள் வரவழைக்கப்படுகின்றன.

இங்ஙனம்,

ஸஹாகார்யதர்சீ.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

“ योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ ”

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கரின் உத்தாந மஹோத்ஸவமும் அதன்பிறகு யாத்ரையும்

நிகழும் ஆவணிமீ 30உ ஸ்ரீ அழகியசிங்கருடைய உத்தாந மஹோத்ஸவம் திருவெவ்வுளூரில் நடைபெறுகின்றது. அப்பொழுது அநேக ஆஸ்திக ப்ரபுக்களும் வித்வான்களும் மற்றும் பல பக்தர்களும் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து அந்த மஹோத்ஸவத்தை ஸேவித்து அதனால் தங்களைத் தந்யர்களாகச் செய்து கொள்வார்களென்று நாம் நம்புகிறோம். உத்தாநாநந்தரம் ஸ்ரீ அழகியசிங்கர் திருவெவ்வுளூரை விட்டுப் புறப்பட்டுத் திருநின்றவூர் முதலிய க்ராமங்கள் மார்க்கமாகச் சென்னைப்பட்டணத்திற்கு எழுந்தருளி, அவ்விடத்தில் திருவல்லிக்கேணியில் அர்ச்சாரூபியாக ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ பார்த்தஸாரதியை மங்களாஶாஸநம் செய்துகொண்டு அவ்விடத்திலேயே ஸ்வல்ப திநங்கள் எழுந்தருளியிருக்கத் திருவுள்ளம்பற்றி யிருப்பதாக ஸ்ரீமுகம் கிடைத்திருக்கிறது. இது சென்னை நகரவாஸிகள் செய்திருக்கும் ஸுக்ருதத்தின் பலமே. ஒருகால் நகரவாஸத்தின் அஸௌகர்யங்களை உத்தேஶித்துச் சென்னைப்பட்டணத்திற்கு எழுந்தருளாமலே ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்தலாந்தரங்களுக்கு யாத்ரையாக எழுந்தருளி விடுவரோ வென்று சென்னை வாஸிக ளெல்லாரும் அதிஶங்கைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த அதிஶங்கைக்கு இடமிராமல் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸங்கல்பித்ததைப்பற்றி நாம் மிகவும் ஸந்தோஷிக்கிறோம். அத்ரத்யர்களுடைய மநோரதத்தை ஸ்ரீ ஶரண்யன் தலைக்கட்டி வைக்கவேண்டுமென்பது நமது ப்ரார்த்தனை.

*   *   *   *

இரண்டு மூன்று வர்ஷ காலமாக ஜகத்தில் ப்ரபலமான யுத்தம் நடந்து வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்த யுத்தத்தால் விளைந்துள்ள க்ஷோபங்கள் இவ்வளவு என்று சொல்

வது ஸாத்யமில்லே. அநேக தேஶங்களில் கணக்கற்ற ஜநங்கள், தமக்குச் சொந்தமாயும் தாம் தீர்க்க காலமாக வம்ஶ பரம்பரையாய் அநுபவித்து வந்ததுமான ஸ்தலத்தை விட்டு

துர்பிக்ஷம்

விட்டு ஸ்தலாந்தரத்திற்கு ஓடி, இருக்க இடமும் உண்ண உணவும் அகப்படாமல் குழந்தை குட்டிகளுடன் வருந்துகிறார்கள். மற்றும் அநேகர், குடும்பம் குடும்பமாக வெடிகுண்டுக்கு இரையாகி மாள்வதையும் அறிகிறோம். கப்பல் கப்பலாக ஸமுத்ரத்தில் மூழ்கடிக்கப்பட்ட ஸாமான்களும் ஜநங்களும் எவரால் கணக்கிடப்படக் கூடும்? 'நமது ஆகாஶ யாநம் ஶத்ரு ராஜ்யத்தில் ப்ரவேஶித்து அநேக நகரங்களையும் க்ராமங்களையும் சாம்பலாக்கி விட்டது' என்னும் வ்ருத்தாந்தங்களை ப்ரதி தினம் பத்ரிகைகளில் படித்து வருகிறோம். 'ஆயிரக் கணக்கான ஸைந்யம் நமது கையில் அகப்பட்டுவிட்டது; நமது யுத்த வீரர்கள் அந்த ஸைந்யத்தை நாலு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு ஓரிடத்திலும் ஒருவரையும் தப்பி ஓடவிடாமல் தடுத்து எல்லாரையும் நசுக்கிவிட்டார்கள்' என்னும் வதந்திக்கும் ஒரு நாளாவது குறைவில்லை. இரு கக்ஷிக்காரர்களும் இம்மாதிரி உத்கோஷித்து வருகிறார்கள். இதைக் கேட்கும்பொழுதெல்லாம் ஸாதுக்களுடைய ஹ்ருதயம் கொதிக்கின்றது. 'இதற்காகவா ஈஶ்வரன் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தான்? அவன் கருணா நிதியன்றோ? இந்த நாஶத்தை அவன் எப்படி ஸஹித்து வருகிறான்? இதுவும் அவனது ஸங்கல்பமாகுமோ?' என்று ஸாது ஜநங்களெல்லாரும் ஈஶ்வரனுடைய கல்யாண குணங்களைப்பற்றி ஶங்கிக்கவும் உபக்ரமிக்கிறார்கள். ஆனால் அவனுடைய ஸங்கல்பத்தை யார் அறியக்கூடும்? 'जगद्धितमशेषतः' [அவன் செய்யும் கார்யங்களெல்லாம் ஜகத்தின் ஹிதத்தின் பொருட்டே ஆகும்] என்று பெரியோர்கள் அநுக்ரஹித்திருக்கும் ஸூக்திகளைக் கொண்டு நாம் ஒருவாறு ஸமாதாநத்தைப் பெறுவதற்கு ப்ரயத்நப்படுவதே நமது கதியாக இருக்கின்றது.

இந்த நாஶம் ஒரு பக்கத்தில் இருக்கட்டும். இப்பொழுது இந்த யுத்தத்தின் பரிபாகமாக ஜகத் முழுவதிலும் உணவுப்பொருள்களின் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. வ்யாதி ஒரு பக்கம் பீடிக்கப் பசி மற்றொரு பக்கம் வருத்துகின்றது. அந்நம் அகப்படாமல் அநேக பாலர்களும் ஸ்த்ரீகளும் வ்ருத்தர்களும் யுவாக்களுமாகப் பல ஜநங்கள் வீதிகளில் ப்ராணனை விடுகிறார்கள். இது என்ன கஷ்டம்! இவ்வுணவுப் பஞ்சம், யுத்தம் நடக்கும் தேஶங்களில் மாத்ரம் ஸம்பவித்திருக்கின்றது என்பது இல்லை; யுத்தம் நடவாமல் இருக்கும் தேஶங்

களிலும் நேர்ந்திருக்கின்றது ; நமது தேசத்திலும் வந்துவிட்டது. வங்காள தேசத்தில் ஸர்க்கார் அதிகாரிகளுக்குத் தெருக்களில் கிடக்கும் பிணங்களை அப்புறப்படுத்துவதே ஒரு பெரிய வேலையாகி விட்டதாம். நம் சென்னை ராஜதானியிலும் அரிசி முதலிய உணவுப் பொருள்கள் துர்லபமாகிவிட்டபடியால், ராஜாங்கத்தார் தாம் சேர்க்கக்கூடிய தான்யங்களை ஒன்று சேர்த்து, அவைகளைத் தமது ஸ்வாதீனமாகச் செய்துகொண்டு, சிலருக்கு அகப்பட்டும் சிலருக்கு அகப்படாமலும் போகாதபடி, எல்லாருக்கும் அவரவர்களுக்குத் தக்கபடி லபிக்குமாறு அவைகளைப் பங்கிட்டுக்கொடுக்க ஆரம்பித் திருக்கிறார்கள். அநேக பெரிய பட்டணங்களில் இப்பொழுது அரிசிப் பங்கீடு நடந்து வருகின்றது. தர்ம பூமி யென்று க்யாதி பெற்றுள்ள நமது தேசத்திலும் இந்தக் கஷ்டம் ஸம்ப வித்துவிட்டதே! பொருள்கள் அகப்படும் பர்யந்தமே இந்தப் பங்கீடு ஸாத்யப்படலாம்; எப்போதும் இது நடைபெற்று வரு மென்று சொல்ல முடியுமா? போதுமான அரிசி அகப்படாத காலம் வந்துவிட்டால் ஜநங்கள் என்செய்வார்கள் என்பதை நினைக்கப் பயங்கரமாக இருக்கிறது. ஈச்வரனே சரணம்.

"नाहारं चिन्तयेत्प्राज्ञो धर्ममेवानुचिन्तयेत्"

[விவேகியானவன் ஆஹாரத்தைப்பற்றிக் கரையக் கூடாது; எப்பொழுதும் அவன் ஆத்மோஜ்ஜீவகத்திற்கு ஸாதநங்களா யுள்ள தர்மங்களையே சிந்தித்து வரவேண்டும்] என்று நமது சாஸ்த்ரம் வற்புறுத்துகின்றது. தேஹ யாத்ரை நமது ப்ராரப்த கர்மங்களுக்கு அநுரூபமான பகவத் ஸங்கல்பத்தைச் சார்ந்ததே.

"अचेष्टमानमासीनं श्रीः कञ्चिदुपतिष्ठति ।
कर्मी कर्मानुसृत्याऽन्यो न प्राप्यमधिगच्छति ॥"

என்கிறபடி ஒருவித முயற்சியையும் செய்யாமல் வேலையற்று உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒருவனுக்கு ஸ்வயமாக ஸம்பத் வருவதையும், உழைப்பாளியாக இருக்கும் மற்றொருவனுக்கு ஆஹாரம் கூடத் துர்லபமாகப் போவதையும் நாம் பார்க்கிறோ மன்றோ? ஸம்பத் வருவதும் வராததும் ஜந்மாந்தரீய கர்மத்தையே அநுஸரிக்கின்றதுதான். ஆனால், "शरीरमाद्यं खलु धर्मसाधनम्" என்கிறபடி சரீரம் தர்மத்திற்கு முக்யமான ஸாதநமானதன்றோ? கேவலம் ஆத்ம ச்ரேயஸ்ஸையே தேடும் பக்தி யோகநிஷ்டர்க ளுக்கும், அவர்களுடைய யோகம் ஸித்திக்கும் பர்யந்தம் தேஹ ஸம்ரக்ஷணம் செய்வது அநுமதிக்கப்பட்டிருக்கின்றதே. ஆகை

யால், நாம் கரையாவிட்டாலும், நமது தேஹத்தைத் தரித்துக் கொள்வதற்கு அபேக்ஷிதமான ப்ரயத்நத்தையேனும் நாம் செய்ய வேண்டியது அவஶ்யமன்றோ ?

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் பதினன்கு வருஷம் வநவாஸம் செய்துவிட்டு அயோத்யைக்குத் திரும்பி வருகையில், பரத்வாஜ மஹர்ஷியின் ஆஶ்ரமத்தைச் சேர்ந்தவுடன், அவர் செய்த முதல் ப்ரஶ்நம், "शृणोषि कच्चिद्भगवन् *सुभिक्षानामयं पुरे" [மஹர்ஷே! அயோத்யையில் அந்ந ஸம்ருத்தி இருக்கிறதா? ஜநங்களெல்லாரும் ரோகமற்று இருக்கிறார்களா?] என்பதே. அதற்குப் பிறகே, "कच्चिच्च युक्तो भरतो जीवन्त्यपि च मातरः" என்று பரதனைப் பற்றியும் மாதாக்களைப்பற்றியும் கேள்வி பிறந்தது. பரதனும் கௌஸல்யா ப்ரப்ருதிகளும் ஸௌக்யத்துடன் இருக்கவேண்டுமே என்னும் விசாரத்தைக் காட்டிலும் மேலிட்டன்றோ இருந்தது ப்ரஜைகளின் அந்ந ஸம்ருத்தியைப்பற்றிய விசாரம்? உண்மையாகவே அந்நம் கிடையாவிட்டால், மநஸ் எப்படி ஒரு கார்யத்தில் ப்ரவர்த்திக்கும்? 'பசி வந்திடப் பத்தும் பறக்கும்' என்பது அமுத மொழியன்றோ? நாம் பசியால் வருந்துவதைப் பொறுத்தாலும் பொறுக்கலாம்; நம்முடைய முகத்தையே நோக்கியிருக்கும் குழந்தைகளும் ஸ்த்ரீகளும் கஷ்டப்படுவதை நாம் எப்படி ஸஹிக்கக் கூடும்? இரண்டு திநங்களுக்கு முன் நெல்லூருக்கு ஸமீபத்தில் ஒரு ஸ்த்ரீ அந்நம் அகப்படாமல் தபித்துத் தமது குழந்தைகளை ஒரு நீர்த் தாங்கலில் தள்ளிவிட்டுத் தானும் அதில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாளென்று திநசரி பத்ரிகையில் வெளியிடப்பட் டிருந்தது. நமது காதுக்கு எட்டாமல் எவ்வளவு இடங்களில் என்ன என்ன கோர ஸம்பவங்கள் நடக்கின்றனவோ நமக்குத் தெரியவில்லை. யுத்தத்தால் நாம் குண்டுக்கு இரையாகி விடுவோமோ என்று பயந்திருந்தோமேயன்றி, இம்மாதிரி அந்ந தாரித்ர்யம் வந்து நம்மை வருத்துமென்று நாம் ஸ்வப்நத்திலும் நினைக்கவில்லை. 'ஒன்றை நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும் எனையாளு மீசன் செயல்'. என் செய்யலாம்! இந்தக் கஷ்டம் எங்கிருந்தோ எப்படியோ நமக்கு நேர்ந்துவிட்டது. இது உக்ரமாக ஓங்காமல் இதனுடன் ஶாந்தமாக வேண்டுமென்று நாம் ஸ்ரீ ஶரண்யனை ப்ரார்த்திக்கிறோம்.

---

* भिक्ष्यन्त इति भिक्षाः - अन्नानि ; भिक्षाणां [अन्नानां] समृद्धिः सुभिक्षम्

यस्त्वविज्ञानवान् भवत्यमनस्कस्सदाऽशुचिः ।
न स तत्पदमाप्नोति सꣳसारञ्चाधिगच्छति ॥ ७ ॥

यस्तु विज्ञानवान् भवति समनस्कस्सदा शुचिः ।
स तु तत्पदमाप्नोति यस्माद्भूयो न जायते ॥ ८ ॥

विज्ञानसारथिर्यस्तु मनःप्रग्रहवान्नरः ।
सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम् ॥ ९ ॥

सारथेः सदश्वा इव - ஸாரதிக்கு நல்ல குதிரைகள் போல, **इन्द्रियाणि वश्यानि [भवन्ति]** - இந்த்ரியங்கள் ஸ்வாதீநங்களாக இருக்கின்றன.

---

7 - 8. இந்த்ரியங்கள் ஸ்வாதீநமாகாமல் இருப்பதால் நேரும் கேடும், அவை ஸ்வாதீநமாக இருப்பதால் நேரும் நன்மையும் இவற்றில் விளக்கப்படுகின்றன.

[ப - ரை] **यः** - எவன், **सदा** - எப்பொழுதும், **अमनस्कः** - அடங்காத மநஸ்ஸுடன் கூடினவனாகவும், **अशुचिः** - [அந்தக் காரணத்தால்] அசுத்தனாகவும் இருந்துகொண்டு, **अविज्ञानवान्** - விஜ்ஞாந மற்றவனாக இருக்கிறானோ [அஸ்வாதீநங்களான இந்த்ரியங்களை உடைத்தாயிருக்கிறானோ], **सः** - அவன், **तत् पदम्** - அந்த ஸ்தாநத்தை [அதாவது : தான் அடையவேண்டும் ஸ்தாநத்தை], **नाप्नोति** - அடைகிறானில்லை. [தவிர] **संसारञ्च** - ஸம்ஸாரத்தையும், **अधिगच्छति** - அடைகிறான். **यस्तु** - எவனோ வென்றால், **सदा समनस्कः शुचिः [सन्] विज्ञानवान् भवति** - எப்பொழுதும் அடங்கின மநஸ்ஸுடனும் அந்தக் காரணத்தால் (சுத்தனாகவும்) இருந்து கொண்டு விஜ்ஞாநத்தை [ஸ்வாதீநங்களான இந்த்ரியங்களை] உடைத்தாயிருக்கிறானோ, **स तु** - அவன், **यस्माद् भूयो न जायते** - எதிலிருந்து மறுபடியும் [ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வரமாட்டானோ] **तत्पदम्** - அப்படிப்பட்ட ஸ்தாநத்தை, **आप्नोति** - அடைகிறான்.

---

9. 'மநோபுத்திகளை அடக்கி இந்த்ரியங்களை எவன் ஸ்வாதீநமாக வைத்துக்கொள்ளுகிறானோ, அவன் புநராவ்ருத்தி ரஹிதமான உத்தம ஸ்தாநத்தை அடைகிறான்; அப்படிக்கில்லாதவன் ஸம்ஸார காந்தாரத்தில் உழலுகிறான்' என்பது சொல்லப்பட்டது. இனி: அந்த உத்தமமான பதம் எது என்பதைக் காண்பிக்கின்றது இந்த மந்த்ரம்.

[ப - ரை] **यस्तु नरः** - எந்த மநுஷ்யன், **विज्ञानसारथिः**- விஜ்ஞாநமாகிற ஸாரதியை உடையவனாயும், **मनःप्रग्रहवान्** - மநஸ்ஸாகிற கடிவாளத்தை உடையவனாகவும் இருக்கிறானோ [அதாவது: ஶுத்தமான மநஸ்ஸையும் அடங்கின இந்த்ரியங்களையும் உடைத்தாயிருக்கிறானோ], **सः** - அவன், **अध्वनः** - [ஸம்ஸாரமாகிற] வழியினுடைய, **पारम्** - எல்லையை,

इन्द्रियेभ्यः परा ह्यर्था अर्थेभ्यश्च परं मनः ।
मनसश्च परा बुद्धिर्बुद्धेरात्मा महान् परः ॥ १० ॥

महतः परमव्यक्तमव्यक्तात्पुरुषः परः ।
पुरुषान्न परं किञ्चित्सा काष्ठा सा परा गतिः ॥ ११ ॥

आप्नोति - அடைகிறான். [அது எதுவென்றால்] **तत्** - அது, **विष्णोः** - பரமாத்மாவின், **परमं पदम्** - உத்தமமான ஸ்வரூபமே.

---

10 - 11. துர்ப்போதமாயிருக்கும் பரமாத்மாவை ஜீவாத்மா உபாஸிப்பது எப்படி ஸாத்யமென்று பயந்த ஶிஷ்யனுக்கு, 'உபாஸ்யன் உபாஸகன் இருவரும் ஒரே குஹையில் ப்ரவேஶித்திருக்கிறபடியால் உபாஸ்யனாக இருக்கும் பரமாத்மாவை ஸுலபமாக உபாஸிக்கக்கூடும்' என்பதை விளக்கி, அந்த உபாஸநம் ஸபலமாவதற்கு இந்த்ரியம் முதலியவைகளின் வஶீகரணம் அவஶ்யம் அபேக்ஷித மென்பதை ஒரு த்ருஷ்டாந்தத்தை முன்னிட்டு ஆசார்யன் உபதேஶித்தார். இப்பொழுது அந்த இந்த்ரியம் முதலியவைகளை வஶீகரணம் செய்வதில், எவை எவை ப்ரதாநங்கள் என்பதை இந்த இரண்டு மந்த்ரங்களால் விளக்குகிறார். இந்த ப்ராதாந்யத்தின் க்ரமமாவது :—

முதலில் இந்த்ரியங்களை அடக்கவேண்டும். அந்த இந்த்ரியங்களைக் காட்டிலும் வஶீகரிக்கப்படவேண்டியதில் ப்ரதாநமாயிருப்பவை 'அர்த்தங்கள்' என்று சொல்லப்படும் விஷயங்களே. ஏனென்றால்: விஷயங்கள் ஸந்நிஹிதங்களாய் இருந்தால், இந்த்ரியங்களை அடக்குவது ஶ்ரம ஸாத்யமன்றோ? அப்படி விஷயங்கள் இந்த்ரியங்களுக்கு துர்நிக்ரஹத்வத்தைக் கொடுக்கக்கூடியவை யாதலால், அந்த விஷயங்களை அடக்குவது இந்த்ரியங்களை அடக்குவதைக் காட்டிலும் முக்யமாகின்றது. விஷயங்களை அடக்குவதாவது : அவைகளைத் தூர விலக்குவதும் அவை ஹேயங்கள் என்பதை உணர்வதுமே. இரண்டாவது : அந்த விஷயங்களைக் காட்டிலும் மநஸ் இன்னும் பலிஷ்டம். ஏனென்றால்: விஷயங்கள் தூர விலக்கப்பட்டிருந்தபோதிலும் மநஸ்ஸுக்கு அவதாநமிராவிட்டால் விஷயங்களைத் தூர விலக்குவதால் என்ன பயன்? ஆகையால் மநஸ்ஸை அடக்குவது முக்யம். மநஸ்ஸை அடக்குவதாவது: விஷயங்களிலுள்ள தோஷங்களை அடிக்கடி ஸம்ஶீலநம் செய்துகொண்டு அவைகளிலிருந்து மநஸ்ஸை நிவர்த்திக்கும் முயற்சியே. மூன்றாவது: மநஸ்ஸைக் காட்டிலும் புத்தி என்பது இன்னும் ப்ரதாநம். இவ்விடத்தில் 'புத்தி' என்னும் பதம் உறுதி என்று சொல்லப்படும் ஜ்ஞாந விஶேஷத்தைக் குறிக்கின்றது. 'விஷயங்களெல்லாம் அல்பங்கள் அஸ்திரங்கள் துஸ்ஸாதங்கள் துக்க மிஶ்ரங்கள்; ஆகையால் ஹேயங்கள்'

என்று யாதொரு உறுதியுண்டோ, அந்த உறுதியே இவ்விடத்தில் விவக்ஷிதம். அந்த உறுதி இராவிட்டால் மநஸ் சலிக்கக்கூடும்; ஒரு ஸமயத்தில் விஷய ப்ராவண்யம் இராமல் இருந்தபோதிலும் மற்றொரு ஸமயத்தில் அந்த ப்ராவண்யம் ஸம்பவித்துவிடுமன்றோ? ஆகையால் அந்த உறுதிஸாதாரண மநஸ்ஸைக் காட்டிலும் பலீயஸ். அதை அடக்குவதாவது: விஷய தோஷங்களை அடிக்கடி ஸம்ஶீலநம் செய்வதால் விஶேஷித்த தார்ட்யத்தை ஸம்பாதித்துக் கொள்வதே. நான்காவது: அந்த உறுதியைக் காட்டிலும், அந்த உறுதிக்கு ஆஶ்ரயமாயிருக்கும் ஆத்மா இன்னும் ப்ரதாநம். ஏனென்றால்: அந்த உறுதியைப் பெறுவதும் ஆத்மாவின் இச்சையைப் பொருத்ததன்றோ? 'இந்த்ரியங்களை ஜயிக்கவேண்டும்; உறுதியை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டும்' என்னும் இச்சை ஒருவனுக்கு ஜநிக்காவிட்டால் உறுதி என்பது ஸாதிக்கப்படமாட்டாதன்றோ? அந்த இச்சை சேதந கர்த்ருகமாதலால், இவ்விடத்தில் 'ஆத்மாவானது புத்தியைக் காட்டிலும் பரம்' என்று சொல்லப்படுகிறது. அந்த ஆத்மாவை அடக்குவதாவது: ஆத்ம ஸ்வரூபத்தின் யாதாத்ம்யத்தை அறியவேண்டும் என்னும் இச்சையை ஸம்பாதித்துக் கொள்வதே. ஐந்தாவது: அந்த ஆத்மாவைக் காட்டிலும் ஶரீரம் இன்னும் பலீயஸ். ஏனென்றால்: ஆத்மாவுக்கு ஏதேனும் இச்சை ஜநிப்பதெல்லாம், அந்த ஆத்மா அடைந்திருக்கும் ஶரீரத்தின் ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் உந்மேஷத்தைச் சார்ந்ததன்றோ? ஶரீரத்தில் ரஜஸ் தமோ குணங்கள் தலையெடுத்து நின்றால், ஆத்ம ஸ்வரூப யாதாத்ம்யத்தின் அத்யவஸாயத்தில் ப்ராவண்யம் எப்படி ஜநிக்கும்? ஆகையால் ஶரீரம் ப்ரதாநமாகின்றது. அந்த ஶரீரத்தை வஶீகரிப்பதாவது: ஸத்வ ப்ராசுர்யத்திற்கு ஹேதுக்களான பரிஶுத்த ஆஹாராதிகளை ஸேவித்து அதனால் ஶரீரத்திற்கு ஸத்வோத்ரேகத்தை ஸம்பாதித்துக்கொள்வதே. ஆறாவது: அந்த ஶரீரத்தைக் காட்டிலும் ஸர்வாந்தர்யாமியாக இருக்கும் பரம புருஷன் இன்னும் ப்ரதாநம். ஏனென்றால்: கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸமஸ்த வஸ்துக்களின் ப்ரவ்ருத்திகளெல்லாம் அவனுடைய ஸங்கல்பாயத்தமன்றோ? ஆகையால் அவனை வஶீகரிப்பதே மிகவும் ப்ரதாநம். அவனை வஶீகரிப்பதாவது: அவனை ஶரணமாக அடைவதே. இந்த க்ரமமே இவ்விடத்திற் சொல்லப்படுகின்றது.

[ப - ரை] **अर्थाः** - விஷயங்கள், **इन्द्रियेभ्यः** - இந்த்ரியங்களைக் காட்டிலும், **पराः** - [வஶீகரிக்கப்படவேண்டிய வகையில்] ப்ரதாநங்கள்; **अर्थेभ्यः** - அந்த விஷயங்களைக் காட்டிலும், **मनः** - மநஸ்ஸானது, **परम्** - ப்ரதாநம்; **मनसः** - அந்த மநஸ்ஸைக் காட்டிலும், **बुद्धिः** - புத்தியானது, **परा** - ப்ரதாநம்; **बुद्धेः** - அந்தப் புத்தியைக் காட்டிலும், **महान् आत्मा** - [தனது இச்சையால் எல்லாவற்றையும் நடத்தக்கூடிய] மஹிமையையுடைய ஆத்மா, **परः** - ப்ரதாநன்; **महतः** - அப்படிப்பட்ட மஹிமையை

உடையவனைக் காட்டிலும் [அதாவது: அந்த ஆத்மாவைக் காட்டிலும்], **अव्यक्तम्** - ஶரீரமானது, **परम्** - ப்ரதாநம்; **अव्यक्तात्** - அந்த ஶரீரத்தைக் காட்டிலும், **पुरुषः** - பரமாத்மாவானவன், **परः** - ப்ரதாநன். **पुरुषात्** - அந்தப் பரமாத்மாவைக் காட்டிலும், **किञ्चिदपि** - மற்றொன்றும், **न परम्**- ப்ரதாநமன்று. **सा काष्ठा** - அவன்தான் எல்லை [அதாவது: உபாயங்களுக்கெல்லாம் எல்லை நிலம்]; **सा परा गतिः** - அவனே பரமப்ராப்யன்.

இந்த மந்த்ரங்களுக்கு இவ்விதம் வ்யாக்யாநம் செய்வதின் விஷயமாக இரண்டொரு ஶங்கைகள் தோன்றலாம். முதலாவது: இவ்விடத்தில், 'இந்த்ரியங்களைக் காட்டிலும் அர்த்தங்கள் பரங்கள்' என்று 'பரம்' என்னும் பதமே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. 'பர' என்னும் ஶப்தத்திற்கு 'ப்ரக்ருஷ்ட [உயர்ந்தது]' என்று பொதுவாகப் பொருள் கொள்வதே பொருந்தியதாக இருக்கையில், 'வஶீகரிக்கப்படுவதில் உயர்ந்தது [அதாவது—ப்ரதாநம்]' என்று குறுக்கிப் பொருள்கொள்வானேன்? உயர்வென்பது வேறு ப்ரகாரங்களில் ஸம்பவிக்கமாட்டாதோ? இது ஒரு ஶங்கை. இதற்கு ஸமாதாநமாவது: இப்படிப் பொருள் கொள்வதே ப்ரகரணத்திற்கு ஸங்கதம். (1) 'ரதம்-ரதத்தை உடையவன்' முதலிய த்ருஷ்டாந்தத்தால் உபாஸந உபகரணத்வம் தோன்றுகிறது. (2) '**यस्त्वविज्ञानवान् भवति**' இத்யாதி வாக்யங்களால் இந்த்ரியாதிகளை வஶீகரிப்பதால் உண்டாகும் பயன் அவைகளை வஶீகரியாவிட்டால் உண்டாகும் அபாயம்-இவை இவ்விடத்தில் பேசப்படுகின்றன. (3) பிந்தி '**यच्छेद्वाङ्मनसी**' என்று இந்த்ரியங்களை வஶீகரிக்கும் ப்ரகாரம் ப்ரஸ்தாவிக்கப்படுகின்றது. இவை யெல்லாவற்றையும் பராமர்ஶித்தால், இந்த மந்த்ரத்தில் வஶீகரிக்கப்பட வேண்டியதிலுள்ள ப்ராதாந்யமே 'பர' ஶப்தத்தால் விவக்ஷிதம் என்பது விளங்கும்.

'**अव्यक्तम्**' என்னும் ஶப்தத்திற்கு 'ஶரீரம்' என்று எப்படிப் பொருள் கிடைக்கும்? என்பது மற்றொரு ஶங்கை. கீழே '**आत्मानं रथिनं विद्धि**' இத்யாதியான மந்த்ரத்தில் உபாஸகனுடைய ஆத்மா ஶரீரம் புத்தி மநஸ் இந்த்ரியங்கள் அவைகளின் விஷயங்கள் இவையெல்லாம், ப்ரயாணத்திற்குப் பரிகரங்களாயிருக்கும் ரதீ ரதம் ஸாரதி ப்ரக்ரஹம் அஶ்வம் அது போகும் மார்க்கம் இவையாக ரூபணம் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளே வஶீகரிக்கும் ப்ரகாரத்தை விவரிக்கும் இம்மந்த்ரத்தில் நிர்த்தேஶிக்கப் படுகின்றன. ஆனால் ஶரீரத்தைத் தவிர்த்த இந்த்ரியம் முதலிய மற்றவையெல்லாம் ஸ்வஸ்வ ஶப்தங்களால் நிர்த்தேஶிக்கப்படுகையில், ரதமென்று ரூபிக்கப்பட்ட ஶரீரம் மாத்ரம் ஸ்வ ஶப்தத்தால் நிரூபிக்கப்படாமல், அதன் ஸ்தாநத்தில் 'அவ்யக்தம்' என்னும் ஶப்தத்தால் நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியால், அந்த ஶப்தத்தால் ஶரீரமே விவக்ஷிதமென்று நிஶ்சயிக்கலாம். நிற்க: 'அவ்யக்தம்' என்பது ஸூக்ஷ்மாவஸ்தையில் இருக்கும் 'ப்ரதாநம்' என்னும் தத்வத்தைக் குறிக்கும். ஶரீரம் என்பது அந்த ஸூக்ஷ்மாவஸ்தையி லிருக்கும்

ப்ரதாநத்தின் கார்ய மாகையால், ஶரீரமும் அவ்யக்தமென்று வ்யவ ஹரிக்கப்படக்கூடும். கார்யங்களாயிருக்கும் பொருள்கள் காரணத் தைச் சொல்லும் ஶப்தங்களால் லக்ஷணயா வ்யவஹரிக்கப்படுவது உபபந்நமே.

ஆத்மா அணுவன்ரு? அதை 'மஹாந்' [பெரியது] என்று எப்படி விஶேஷிக்கக் கூடும்? இது மற்றும் ஒரு ஶங்கை. இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள இந்த்ரியம் முதலானவை அசேதநங்கள்; ஆத் மாவோ சேதந வஸ்து; ஆகையால் அதற்கு அஸாதாரணமாக வரும் கர்த்ருத்வத்தை உத்தேஶித்து அது 'மஹாந்' என்று உத்க்ருஷ்டமாகப் பேசப்படுகின்றது என்பதே இந்த ஶங்கைக்கு ஸமாதாநம். அப்படி 'மஹாந்' என்பதை 'ஆத்மா' என்பதற்கு விஶேஷணமாக எடுத்துக் கொள்ளும் பக்ஷத்தில், அடுத்த வாக்யத்தில் 'அந்த ஆத்மாவைக் காட் டிலும்' என்றன்றோ நிர்த்தேஶிக்கப்பட்டிருக்கவேண்டும்? அப்படி நிர்த் தேஶியாமல், 'அந்த மஹத்தைக் காட்டிலும்' என்று சொல்லப்பட் டிருப்பதைப் பார்க்கும்பொழுது, முன் வாக்யத்தில் 'ஆத்மா' என்பதை விஶேஷ்யமாக எடுத்துக்கொள்வது உபபந்ந மன்றென்றும் 'மஹாந்' என்பதையே விஶேஷ்யமாகச் சொல்வதே உபபந்நமாகு மென்றும் தோன்றவில்லையா? இதுவுமொரு ஶங்கை. ஆக்ஷேபம் சரியானதே; முன் வாக்யத்தில் எது விஶேஷ்யமோ அந்த விஶேஷ்ய வாசியான பதத்தாலேயே அடுத்துவரும் வாக்யத்தில் அதை நிர்த்தேஶம் செய்வது தான் ஸாது; ஆனல், சிற்சில விடங்களில் விஶேஷண வாசி பதத் தாலும் ப்ரக்ருத விஶேஷ்யம் நிர்த்தேஶிக்கப்படுவது உண்டு. 'கால் நடையாகப் போகும் தேவதத்தனைக் காட்டிலும் குதிரையின் மீது போகும் யஜ்ஞதத்தன் ஶீக்ரம் போவான்; குதிரையின் மீது போகிற வனைக் காட்டிலும் தூம சகடத்தில் செல்லும் விஷ்ணுமித்ரன் இன்னும் ஶீக்ரம் போகக்கூடியவன்' என்னும் ப்ரயோகங்கள் இதற்கு நிதர்ஶநங்கள்.

सा काष्ठा सा परा गतिः இந்த மந்த்ரத்தில் உபாஸநத்தை நிறை வேற்றிக் கொடுக்கும் உபாயங்கள் வரிசையாக ப்ரஸ்தாவிக்கப்பட்டு வருகின்றன. அவைகளுள் கடைசி உபாயம் பரமாத்மாவே என்ப தைக் காட்டுகின்றது 'ஸா காஷ்டா' என்பது. அவன் அந்தர்யாமி யாக இருந்துகொண்டு உபாஸநத்தை நிறைவேற்றிக் கொடுக்கிரு னன்ரோ? 'அப்படிப் பரமாத்மாவும் உபாயங்களுள் ஒன்ருகிவிட்டால், உபேயம் வேறென்று இருக்கின்றதோ?' என்று உதிக்கும் ஶங்கைக்கு ஸமாதாநத்தை '**सा परा गतिः**' [அவனே பரம ப்ராப்யன்] என்பது விளக்குகின்றது. அதாவது: அவனே உபாயம், அவனே உபேயம்; அவனே ப்ராபகன், அவனே ப்ராப்யன் என்பது கருத்து.

एष सर्वेषु भूतेषु गूढोऽऽत्मा न प्रकाशते ।
दृश्यते त्वग्र्यया बुद्ध्या सूक्ष्मया सूक्ष्मदर्शिभिः ॥ १२ ॥

यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेद् ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥ १३ ॥

---

12. இப்படி : 'பர' என்னும் ஶப்தத்தால் சொல்லப்படும் உத்கர்ஷமானது வஶீகரிக்கப்படவேண்டிய வகையில் விவக்ஷித மென்பதை இந்த மந்த்ரமும் இதற்கு அடுத்து வரும் மந்த்ரமும் விளக்குகின்றன.

[ப - ரை] **सर्वेषु भूतेषु** - எல்லா ப்ராணிகளிடத்திலும், **गूढ एष आत्मा** - அந்தர்யாமியாக இருக்கும் இந்தப் பரமாத்மா, **न प्रकाशते** - ['யஸ்த்வவிஜ்ஞாநவாந் பவதி' இத்யாதியான வாக்யங்களிற் சொல்லியிருக்கிறபடி இந்த்ரியாதிகளை வஶீகரியாதவர்களுக்கு] உள்ளபடி ப்ரகாஶிக்கிறானில்லை. **तु** - ஆனால், **सूक्ष्मदर्शिभिः** - [இந்த்ரியாதிகளை வஶீகரித்து] ஸூக்ஷ்மமான ஆத்ம தத்வத்தைத் தர்ஶிக்கும் ஶீலமுள்ளவர்களால், **अग्र्यया सूक्ष्मया बुद्ध्या** - ஐகாக்ர்யத்துடனும் ஸூக்ஷ்மார்த்தத்தைப் பிரித்து அறிவிக்கும் ஶக்தியுடனும் கூடின புத்தியைக் கொண்டு, **दृश्यते** - பார்க்கப்படுகிறான். '**गूढोऽऽत्मा**' - ஸந்தி ஆர்ஷம்.

---

13. இந்த்ரியம் முதலியவைகளை வஶீகரணம் செய்யவேண்டுமென்று கீழே சொல்லப்பட்டது. 'வஶப்படுத்துவது என்பதற்கு அடக்கி வ்யாபார மற்றவையாக அவைகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்று அர்த்தமன்றோ? அது எப்படி' என்பது இப்பொழுது விவரிக்கப்படுகின்றது.

[ப - ரை] **प्राज्ञः** - உபாஸகன் **वाक्** - வாக் இந்த்ரியத்தை [வாக் முதலிய கர்மேந்த்ரியம் ஜ்ஞாநேந்த்ரியம் இவை யெல்லாவற்றையும்], **मनसी** - மநஸ்ஸில், **यच्छेत्** - நியமிக்கவேண்டும்; **तत्** - அந்த மநஸ்ஸை, **आत्मनि ज्ञाने** - ஆத்ம விஷயமான அத்யவஸாயத்தில், **यच्छेत्** - நியமிக்கவேண்டும்; **ज्ञानम्** - அந்த புத்தியை, **महति आत्मनि** - [கர்த்ருத்வமாகிய] உத்கர்ஷத்தை யுடைய ஆத்மாவினிடத்தில். **नियच्छेत्** - அடக்கவேண்டும்; **तत्** - அந்த ஆத்மாவை, **शान्त आत्मनि** - [ஸர்வாந்தர்யாமியா யிருக்கும்] ஷூர்மிஷட்க ரஹிதமான பரமாத்மாவினிடத்தில், **यच्छेत्** - அடக்கவேண்டும்.

இவ்விடத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் சில உண்டு. (1) '**वाक्**' என்பது '**वाचम्**' என்பதற்குப் பதிலாகவும், '**मनसी**' என்பது '**मनसि**' என்பதற்கு பதிலாகவும் '**तद्यच्छेच्छान्त आत्मनि**' என்னும் இடத்தில், '**तम्**' என்பதற்குப் பதிலாக '**तत्**' என்றும் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி ப்ரயோகங்களை வேதத்தில் காண

லாம். (2) மநஸ்ஸை ஜ்ஞாநத்தில் நியமிக்கவேண்டுமென்னு மிடத்தில், 'आत्मनि ज्ञाने' என்னும் பதங்கள் காணப்படுகின்றன. இதற்கு 'ஆத்மா வாகிற ஜ்ஞாநத்தில்' என்றுவது, 'ஜ்ஞாநமாகிற ஆத்மாவில்' என்று வது அந்வயிப்பது அஸங்கதம். 'ஆத்மாவினிடத்தில் இருக்கும் ஜ்ஞா நத்தில்' [आत्मनि वर्तमाने ज्ञाने] என்று பொருள் கொள்ளலாமோ வென் றால், ஆத்மாவினிடம் இராத ஜ்ஞாநம் இல்லையாகையால், 'ஆத்மாவி னிடம் இருக்கும்' என்னும் விசேஷணம் வ்யர்த்தமாகும். இம்மாதிரி யான க்லேசங்களை நிவர்த்திக்கும் பொருட்டு, 'ஆத்ம விஷயகமான ஜ்ஞாநம்' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. அப்படிப் பொருள் கொள்ளும்பக்ஷத்தில், அடுத்து வரும் வாக்யம் வ்யர்த்தமாகிவிடுமோ வென்னும் சங்கைக்கு இடமில்லை. இது மேல் விவரிக்கப்படும் விவ ரணத்திலிருந்து விளங்கும்.

'வாக் முதலிய இந்த்ரியங்களை மநஸ்ஸில் நியமிக்கவேண்டும்' இத்யாதியான வாக்யங்களின் கருத்தாவது: வாக்கை மநஸ்ஸில் நிய மிப்பதாவது—மநஸ்ஸுக்கு அநுகுணமல்லாத ப்ரவ்ருத்தியிலிருந்து வாக்கை விமுகமாகச் செய்வதே. மநஸ்ஸைப் புத்தியில் நியமிப்பதாவது: புத்தி என்று சொல்லப்படும் அத்யவஸாயத்திற்கு அநுகுணமான ப்ரவ்ருத்தியில் மநஸ்ஸைச் செலுத்துவதே. அதாவது—'ஆத்மா உபா தேயம்; மற்றவை ஹேயங்கள்' என்னும் அத்யவஸாயத்தைக் கொள் வதே. புத்தியை ஆத்மாவில் நியமிப்பதாவது—'ஆத்மாவே உபாதேயம், ஆகையால் அதுவே ஸாக்ஷாத்கரிக்கப்படவேண்டும்' என்னும் விஷயத் தில் புத்தியைச் செலுத்துவதே. அந்த ஆத்மாவை சாந்தமான பர மாத்மாவினிடம் நியமிப்பதாவது—'ஆத்மாவானது பரமாத்மாவுக்கு சேஷபூதன்' என்னும் ப்ரதிபத்தியே. அதாவது: அவனை சரணமாக அடைவதே.

'கீழே ரூபகத்தில் ரூபிதமாயிருக்குமவையெல்லாம் இந்த மந்த் ரத்தில் உதாஹரிக்கப்படவில்லையே; சரீர நியமநம் விஷய ஸந்நிதி பரிவர்ஜ்ஜநம் இவை இதில் ப்ரஸ்தாவிக்கப்படவில்லையே; ஆகையால் அவைகளை வசீகரிப்பதன் ப்ரகாரம் இதில் சொல்லப்படுகின்றது என்பது எப்படி யுக்தமாகும்?' என்றால், அவை இரண்டும் அர்த்த ஸித்த மென்று விலக்கப்பட்டன. நிற்க: அவை இரண்டும் யோகத்தின் உத் பாதந காலத்தில் [வாக் முதலியவைகளுக்கு கொஞ்சம் வ்யாபாரம் இருக்கும் காலத்தில்], ஸம்பாதிக்கப்பட வேண்டியவை; இந்த மந்த்ரத் திலோ வென்றால், வாக் முதலியவைகளுக்கு வ்யாபாரம் சுத்தமாக அற்றுப்போயிருக்கும் யோக காலத்தில் செய்யப்படவேண்டிய நிய மநமே சொல்லப்படுகின்றது. அந்தக் காரணத்தால்தான் அவை இரண்டும் ப்ரஸ்தாவிக்கப்படவில்லை. ஆதலால், இந்த மந்த்ரத்தில் வசீ கரண ப்ரகாரம் சொல்லப்படுகின்றது என்று சொல்வது யுக்தமே ஆகும்.

उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान्निबोधत ।
क्षुरस्य धारा निशिता दुरत्यया दुर्गं पथस्तत्कवयो वदन्ति ॥ १४ ॥

अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसन्नित्यमगन्धवच्च यत् ।
अनाद्यनन्तं महतः परं ध्रुवं निचाय्य तं मृत्युमुखात्प्रमुच्यते ॥१५॥

---

14. இவ்விதம் வஶீகரண ப்ரகாரத்தை உபதேஶித்து விட்டு, ஆசார்யர் உபாஸகர்களை நோக்கிப் பின்வருமாறு எச்சரிக்கிறார்.

[ப-ரை] **उत्तिष्ठत** - எழுந்திருங்கள் [ஆத்ம ஜ்ஞாநத்திற்கு அபிமுகமாக இருங்கள்]; **जाग्रत** - விழித்திருங்காள் [அஜ்ஞாநமாகிற நித்ரையை விட்டுவிடுங்கள்]; **वरान्** - ஶ்ரேஷ்டர்களை [ப்ரஹ்ம வித்துக்களை], **प्राप्य** - அடைந்து, **निबोधत** - [ஆத்ம தத்வத்தை] அறியுங்கள். [அது] **क्षुरस्य** - க்ஷுரம் என்னும் ஆயுத விஶேஷத்தின், **धारा** - நுனி [போல்] **निशिता** - கூர்மையானது; **दुरत्यया** - கஷ்டப்பட்டே தாண்டப்பட வேண்டியது. **कवयः** - ஜ்ஞாநிகள், **तत्** - அதை, **दुर्गं पथः**- கஷ்டப்பட்டுப்போகக்கூடிய மார்க்கமென்று, **वदन्ति** - சொல்லுகிறார்கள் [கத்தி முனையில் பழகுவதுபோல் ஆத்ம தத்வத்தை ஸாவதாநமாக அறியவேண்டும். ஸ்வல்ப அநவதாநமும் நாஶத்தை விளைவித்துவிடும் என்பது கருத்து.]

---

15. அந்த ஆத்ம தத்வம் துரவபோதம்; அதாவது: அது பாஹ்யேந்த்ரியங்களால் அறியக்கூடியதன்று என்பதை விவரித்துவிட்டு, கீழ்ச் சொல்லியிருக்கும் ப்ரகாரம் இந்த்ரியாதிகளை வஶீகரணம் செய்தவர்கள் அந்த ஆத்மாவைத் தர்ஶந ஸமாநாகாரமான உபாஸநத்தால் விஷயீகரித்து ஸம்ஸாரத்திலிருந்து விடப்பட்டவர்களாகிறார்கள் என்று இந்த மந்த்ரத்தில் ஆசார்யன் செய்யும் உபதேஶம் உபஸம்ஹரிக்கப்படுகின்றது.

[ப-ரை] **यत्** - எந்தக் காரணத்தால், [அந்தப் பரமாத்ம தத்வமானது] **नित्यं अशब्दम्** - எப்பொழுதும் பெயரற்றதோ, **नित्यं अस्पर्शम्** - எப்பொழுதும் தொடக்கூடாததாயும், **नित्यं अरूपम्** - ரூபமற்றதாயும் இருக்கிறதோ, **अव्ययम्** - [இப்படி அஶப்தமாயும் அஸ்பர்ஶமாயும் அரூபமாயும் இருக்கிறபடியால்] அவயவ வ்ருத்தி க்ஷயங்களற்றிருக்கின்றதோ, **तथा अरसं अगन्धवच्च** - அப்படியே கந்தம் ரஸம் இவையற்றுமிருக்கிறதோ, **अनादि अनन्तम्** - ஆதியும் அந்தமுமற்றதோ, [அந்தக் காரணத்தால்], **महतः परम्** - மஹானாக இருக்கும் ஜீவனைக் காட்டிலும் உத்க்ருஷ்டனான, **ध्रुवम्** - ஸ்திரமான, **तम्** - அந்தப் பரமபுருஷனை, **निचाय्य** - ஸாக்ஷாத்கரித்து, **मृत्युमुखात्** - பயங்கரமான ஸம்ஸாரத்திலிருந்து, **प्रमुच्यते** - விடப்படுகிறான்.

2/10/17

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—8—'43 to 31—8—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

			Rs.	
1.	Sri A. Krishna Rao, Ponneri	...	3	0
2.	,, E. Ramanujachariar, Tiruvellore	...	2	0
3.	,, G. R. Thotadri Iyengar, Kilpauk	...	3	0
4.	,, S. Alavandar Iyengar, Tinnevelly Town	...	3	0
5.	,, R. Narayana Iyengar, Srirangam	...	3	0
6.	,, P. V. Ramaswami Iyengar, Madura	...	3	0
7.	,, P. S. Venkatachary, Kaumuthi	...	3	0
8.	,, A. Bhashyam Iyengar, P.T. Madras	...	1	0
9.	,, D. Ramaswami Iyengar, Tinnevelly Jn.	...	3	0
10.	,, A. Rangachariar, Karaikudy	...	3	0
11.	,, N. Veeraraghavachariar, Viravanallur	...	3	0
12.	,, Appa S. Srinivasa Iyengar, Kalyanapuram	...	3	0
13.	,, K. Srinivasa Iyengar, Panapakkam	...	3	0
14.	,, T. Srinivasaraghava Iyengar, Sholavandan, (1942 copies)	...	2	12
15.	,, V. K. Vengu Iyengar, Kilavasalpatty	...	3	0
16.	,, K. V. S. Narasimhachariar, Nungambakkam	...	3	0
17.	,, C. Rajagopalachari, Tyagarayanagar	...	1	0
18.	,, Dikshatar Narayanachar, Thillaisthanam	...	3	0
19.	,, R. Kesava Iyengar, Triplicane	...	3	0

[இந்த ஸஞ்சிகையுடன் இருபத்தோரு ஸஞ்சிகைகள் வெளியாகி யிருக்கின்றன. 1942-வது வர்ஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது.]

*Regd. No. M: **4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க் கண்ட புத்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	5—0—0	6—0—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	4—0—0	5—0—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—6—0	0—8—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—4—0	0—6—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் .. (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—4—0	0—6—0
7. ஷை (தேலுங்கு லிபி)	0—6—0	0—8—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—2—6	0—3—0
வேறு இடங்களில் அச்சிடப்பெற்றவை		
1. மீமாம்ஸா பாதுகை ... ... (பரித்ராணத்துடன் க்ரந்த லிபி)	0—8—0	0-10—0
2. ஸமுத்ரயாநதோஷ நிர்ணயம்; விதவா விவாஹ கண்டநம் (நாகர லிபி) ...	0—4—0	0—6—0
3. தத்வத்ரய நிரூபணம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

23—4—'43.]

N.B. ஷை விலைகள் ஸெப்டம்பர்மீ 30உ பர்யந்தமே குறைவாக ஏற்பட்டிருக்கின்றன.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.